பக்கங்கள்: 14

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 0 ஞாயிற்றுக்கிழமை 19.11.2023 கதிர் 373

# வடக்கு கிழக்கிற்கு 2% ஒதுக்கீடு கூட இல்லை

## அதனால் வரவு செலவுத் திட்டத்தை எதிர்த்து தமிழ் காங்கிரஸ்

வரவு செலவுத் திட்டத்தில் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு 2 சதவீதம்கூட நிதி ஒதுக்கப்படவில்லை. அதிலும் வடக்கு மாகாணத்திற்கு ஒரு சதவீத நீதி ஒதுக்கீடுகூடக் கிடையாது. அப்படிப்பட்ட வரவு செலவுத் திட்டத்தை எதிர்க்கின்றோம்.

இவ்வாறு தமிழ்த்தேசியமக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்றஉறுப்பினருமான கஜேந்திரகுமார்பொன்னம்பலம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வரவு செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான ஆறாவது நாள் 2

## இது ரகசியம் அல்ல!

இலங்கைக் கிரிக்கெட் விவகாரம் நேற்றும்நாடாளுமன்றத்தில்சூட்டைக் கிளப்பியது. விளையாட்டுத்துறை அமைச்சர் இடைக்கால நிர்வாகம் ஒன்றை நியமித்ததைத் தொடர்ந்து இலங்கைக் கிரிக்கெட்டைத் தடை செய்யக்கோரி சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸிலுக்கு இலங்கைக் கிரிக்கெட்டால் அனுப்பப்பட்டவை என்றுகூறப்பட்டமூன்றுகடிதங்களை நாடாளுமன்றத்தில் முன்வைத்தார் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க.

பொய்க் குற்றச்சாட்டுக்களின் கீழ் சர்வதேச கிரிக்கெட் சபையை இலங்கைக் கிரிக்கெட் தவறாக வழிநடத்தி இந்தத் தடையை விதிக்கவைத்துள்ளதாகவும் அமைச்சர் சபையில் தெரிவித்தார். வெட்கக்கேடானது என்றும் விளாசினார்.

ஆளும் தரப்புக்கு இந்த 2

## நினைவேந்தல்களுக்கு தடை விதிக்க மறுப்பு

### மல்லாகம் நீதிமன்றமும் நேற்றுக் கட்டளை

மாவீரர் வார நிகழ்வுகள் இன்று தொடங்கவுள்ள நிலையில் அவற்றைத் தடை செய்ய முடியாது என்று மல்லாகம் நீதிமன்றம்நேற்றுகட்டளைபிறப்பித்தது. தெல்லிப்பளைப்பொலிஸாரால்தாக்கல் செய்யப்பட்ட மனுவில் நீதிமன்றம் இந்தக் கட்டளையைப் பிறப்பித்தது.

மாவீரர் நாளையொட்டிய 8

## ராஜபக்ஷக்களுக்கு எதிரான வழக்கு அரசமைப்பின் கீழ் சரியான ஒன்றா?

### நாமல் நேற்று நாடாளுமன்றில் கேள்வி

பொருளாதார வங்குரோத்துநிலைக்கு ராஜபக்ஷக்களும் அவர்களோடிணைந்த அதிகாரிகள் பலருமே காரணம் என்று தீர்ப்பு வழங்கப்பட்ட உயர் நீதிமன்ற வழக்கு அரசமைப்பின்29ஆவது சரத்தின் கீழ் சரியானதா என்றுநாடாளுமன்றத்தில் நேற்றுக் கேள்வி எழுப்பினார் பொது ஜன பெரமுனவின் அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வரவு செலவு திட்டத்தின் இரண்டம் வாசிப்பு மீதான ஆறாவது நாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்று கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்பின் 29ஆவது சரத்துக்கு அமைவாக, ஆளும் தரப்பின் கொள்கை யொன்றைநீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்த முடியுமா என்ற கேள்வி எமக்குள்ளது.

ஆட்சித் தரப்பின் கொள்கைக்குஅமைவாக வரி விடயத்தில் நாடாளுமன்றத்தில் ஏகமனதாக சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதேபோன்று வரி அதிகரிப்பும் வரவு, செலவுத் திட்டத்திற்கு அமைவாக நாடாளு மன்றத்தினால்அங்கீகரிக் கப்பட்ட விடயமாகும்.

அன்று வரியைக் குறைத்தமைக்கு எந்தக் கட்சியும் அன்று நாடாளுமன்றத்தில் எதிர்ப்பினைத் தெரிவிக் கவில்லை. அவ்வாறு பொறுப்புக் 2

## கைது செய்யப்பட்ட சந்தேகநபர் பொலிஸ் தாக்குதலில் இறந்தாரா?

### வட்டுக்கோட்டையில் பதற்றம்

வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டசந்தேகநபர் ஒருவர் மோசமாகத் தாக்கப்பட்டதால் உயிரிழந்துள்ளார் என்ற குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளதைஅடுத்துபதற்றம் அங்கு ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடக்கூடும்என்ற 8

## சீனாவின் பாதை மற்றும் மண்டல திட்ட 2ஆம் கட்டத்திற்கு நகர இலங்கை தயார்

### சீனப் பிரதிநிதியிடம் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

பொருளாதார ரீதியில் அதிக பங்களிப்பை வழங்கக் கூடிய பாதை மற்றும்மண்டலம்திட்டத்தின் இரண்டாவது கட்டத்திற்குள் பிரவேசிப் பதற்கு அதன் பங்காளரான இலங்கை போன்ற நாடுகள் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார் .

சீன ஜனாதிபதியின் விசேட பிரதிநிதியும் அரச உறுப்பினருமான 2

## நீதிமன்றத் தீர்ப்பு நியாயமானதே என்று நீதி அமைச்சர் தெரிவிப்பு

மக்களின் அடிப் படைஉரிமைமீறப்படும் பட்சத்தில் வழங்கப்பட வேண்டிய தீர்ப்பையே உயர் நீதிமன்றம் வழங்கியுள்ளது என்று நீதிஅமைச்சர்விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

கண்டிக்கு நேற்று வருகைதந்தஅவர்அங்கு செய்தியாளர்களிடம் இதனைத்தெரிவித்தார்.

நாட்டின்பொருளாதார வங்குரோத்து நிலைக்கு ராஜபக்ஷக்களும் அவர்களோடிணைந்த அதிகாரிகளும் காரணம் என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கிய வழக்கு அரசமைப்பின் 27ஆம் சரத்துக்கு மாறானது என்கிற வகையில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கருத்துத் தெரிவித்த நிலையில் நீதி அமைச்சர் இப்படிக் கருத்துக்கூறியுள்ளார். அவர் இது தொடர்பில் மேலும்தெரிவித்ததாவது:

அரசமைப்பின் பிரகாரம்பொதுமக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படும் பட்சத்தில் அதற்கு எதிராக நீதி மன்றம் வழங்க வேண்டியதீர்ப்பினையேவழங் கியுள்ளது. அதுவொரு பெறுமதியான 8

## மகிந்த போன்ற தேசியத் தலைவரை அவமானப் படுத்துவதை ஏற்கமுடியாது

### இப்படிச் சொல்கிறார் அருந்திக்க

மகிந்த ராஜபக்ஷ இந்த நாட்டின் தேசியத் தலைவரை அவரை அவமானப்படுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று இராஜாங்க அமைச்சர்அருந்திக்க பெர்ணான்டோ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வரவு செலவு திட்டத்தின் இரண்டம் வாசிப்பு மீதான ஆறாவது நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

மஹிந்த ராஜபக்ஷவினை நாட்டின் பொருளாதார நிலைமைகளுக்கு பொறுப்புக் கூறுமாறு தெரிவித்து விமர்சனங்களைச் செய்வது பொருத்தமற்றதாகும். 2

## பொருளாதாரத்தை முழு ஸ்திர நிலைக்கு கொண்டுவருவதே பட்ஜெட்டின் நோக்கம்

தற்போது ஸ்திரமாக உள்ளநாட்டின்பொருளாதாரத்தைமுழுஸ்திரத்தன்மைக்கு கொண்டு வருவதே இந்த ஆண்டு பட்ஜெட்டின் முக்கிய நோக்கமாகும்என்றுநிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஐந்தாவது தேசிய இளைஞர் நாடாளுமன்றத்தின் 5ஆவது அமர்வு நவம்பர் 18 மற்றும் 19 ஜனாதிபதி செயலக பழைய நாடாளுமன்ற அவையில் நடைபெற்றது.

'இலங்கை எதிர் கொள்ளும்தற்போதைய பொருளாதார சவால்களை வெற்றிகொள்வதற்கு 2024 வரவு செலவுத்திட்டமுன்மொழிவுகளை திறம்பட பயன்படுத்துவதற்கான இளைஞர்களின் யோசனைகள் மற்றும் ஆலோசனை 9

## எதிர்க் கட்சிகளின் கெட்ட கனவுகளை வரவு செலவு திட்டம் சிதைத்துவிட்டது

மக்கள்மேலும்இக்கட்டான சூழ்நிலைக்குள் சிக்கிக்கொள்ளும் வரை காத்திருந்த எதிர்க்கட்சிகளின் கனவுகள் இந்த வரவுசெலவுத் திட்டத்தின்மூலம்சிதைக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர்இதனைத்தெரிவித்தார்.

அவர்அங்குமேலும் தெரிவித்ததாவது:

எமது நாடு எதிர் கொண்ட பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு, எடுக்கப்பட்ட பிரபல்யமற்ற மற்றும் அரசியல் நோக்கமற்ற தீர்மானங்களினால், தற்போது நாடு ஸ்திரத் தன்மை ம 2

## பிரதமருடனும் சீன பிரதிநிதி நேற்றுச் சந்தித்துப் பேச்சு

இலங்கையின் தற்போதைய பொருளாதாரம், அரசியல் உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து பிரதமர் தினேஷ் குணவர்தனவுடன் சீன ஜனாதிபதியின் விசேட பிரதிநிதி ஷென் யிகின் உள்ளிட்ட தூதுக்குழுவினர்சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

மூன்று நாள் பயணமாக இலங்கைக்கு வருகை தந்துள்ள சீன ஜனாதிபதிஜிஜின்பிங்கின் விசேட பிரதிநிதி ஷென் யிகின் உள்ளிட்ட தூதுக் குழுவினர் நேற்று திங்கட்கிழமை அலரி மாளிகையில் பிரதமர் தினேஷ் குணவர்தனவை சந்தித்து கலந்துரையாடினர்.

இலங்கை பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங் கொடுத்திருந்த சந்தர்ப் பத்தில் பொருளாதாரத்தை 8

## கடலில் அத்துமீறுவோரை தடுக்கத் தவறும் அமைச்சரும் ஆளும் தரப்பும் வெட்கக்கேடு

### நாடாளுமன்றில் சாணக்கியன் சாட்டையடி

இலங்கைக் கடலில் அத்துமீறி மீன்பிடிப்பவர்களைக் கட்டுப்படுத் தாமையைஎண்ணிமீன் பிடித்துறைஅமைச்சரும் ஆளும் தரப்பும் வெட்கப்படவேண்டும் என்று தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்சாணக்கியன் இராசமாணிக்கம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வரவு செலவு திட்டத்தின் இரண்டம் வாசிப்பு மீதான ஆறாவது நாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்று கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:

அத்துமீறி மீன்பிடித் தொழிலிலீடுபடுபவர்கள் மீதுஎந்தவொருநீதிமன்ற நடவடிக்கைகளும் எடுக்கப்படாத நிலைமைகள் காணப்படுகின்றன. அண்மையில்கூட22பேர்அவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ளனர். அப்பாவி மீனவர்கள் அத்துமீறல்களை 8

## இனி இது .....

விவகாரம் இப்போது பெரும் தலையிடியாக மாறியிருக்கிறது. உண்மையில் வரவு செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டவுடன் இந்த விவகாரம் அமந்துவிடும் என்றும் மக்களின் கவனம் அதிலிருந்து திசை திரும்பிவிடும் என்றும்தான் ஆளும் தரப்பினர் எதிர்பார்த்தனர். ஆனால், அதற்கு எதிர்மாறாக வரவு செலவுத் திட்டத்தைவிட இந்த விவகாரமே தொடர்ந்தும் ஊடகங்களினதும் மக்களினதும் கவனத்தை ஈர்த்து வருகின்றது என்பது ஆளும் தரப்புக்குத் தலையிடியாக மாறியிருக்கிறது.

முன்னதாக, இந்த விவகாரம் தொடர்பில் ஜனாதிபதி தனது ஐக்கிய தேசியக் கட்சிப் பிரமுகர்களுடனும் ஆளும் தரப்பு மூத்த அமைச்சர்களுடனும் ஆலோசனைகளை நடத்தியுள்ளார். அப்போது பலரும் விளையாட்டுத்துறை அமைச்சரை பதவியை விட்டுத் தூக்கவேண்டும் என்று ஆவேசப்பட்டுள்ளனர். ஆனால், அரசியல் அனுபவம் மிக்கவர்கள், அப்படிச் செய்தால் அது ஆளும் தரப்புக்கு இன்னும் மோசமான விளைவுகளையே ஏற்படுத்தும் என்று சுட்டிக்காட்டியுள்ளனர்.

வரவு செலவுத் திட்டம் நாடாளுமன்றில் முன்வைக்கப்பட்டதும் இந்த விடயம் மீதான கவனம் திசை திரும்பிவிடும் என்றும் மெல்ல இந்த விவகாரம் அடங்கியதும் அமைச்சர் மீது தேவையான நடவடிக்கைகளை எடுக்கலாம் என்றும் கடைசியில் எல்லோருமாக ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் நினைத்ததற்கு நேர்மாறாக வரவு செலவுத் திட்டத்தைவிட கிரிக்கெட் விவகாரம்தான் தெற்கில் அதிகம் கவனத்தைத் தொடர்ந்து ஈர்த்துவருகின்றது.

போதாததற்கு அமைச்சரும் எதிர்க் கட்சித் தலைவரும்கூட இந்த விவகாரத்தை தணியவிடாமல் தொடர்ந்து ஊதிப் பெருப்பித்து வருகின்றார்கள். இப்போது அமைச்சரைப் பதவி நீக்கவும் முடியாமல் வைத்திருந்து பிரச்சினையை மேலும் மேலும் வளர்த்து ஆளும் தரப்புக்குக் கெட்டபெயரை வாங்கவும் முடியாமல் திணறுகின்றது ஆளும் தரப்பு.

அமைச்சரோ இந்த விடயத்தில் எந்த விளைவுகள் வந்தாலும் மோதுவதைக் கைவிடுவதில்லை என்கிற நிலைப்பாட்டிலேயே பயணிப்பதால், மசிந்து வர அவர் இணங்குகிறார் இல்லை. மற்றொரு புறத்தில் எதிர்க்கட்சியும் விவகாரத்தை இன்னும் பூதாகாரமாக்குவதில் குறியாக இருக்கின்றது. அதனால் ஆளும் தரப்பினரை இது தொடர்பில் இப்போதைக்கு எதுவும் பேசாமல் அமைதி காக்குமாறு உத்தரவிடப்பட்டிருக்கிறதாம். விடயத்தை மெல்ல அடங்கிவிடுமாறு உத்தரவிடப்பட்டிருக்கிறதாம்.

இந்த விவகாரம் எந்த எல்லைவரை போகும் என்று நாமும் பொறுத்திருந்து பார்க்கலாம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:

போர் முடிவடைந்த நாளில் இருந்து வடக்கு கிழக்கை போரால் பாதிக்கப்பட்ட பிரதேசமாக விசேடமாக அறிமுகப்படுத்தி நாட்டினுடைய ஏனைய பிரதேசங்களுக்கு வேறுபட்டதொரு பிரதேசமாக அறிவித்து அந்த மக்களுடைய பொருளாதாரத்தை முதற்கட்டமாகப் பாதுகாத்து அதை வளர்ப்பதற்கான திட்டம் ஒன்றை குறைந்த 5 வருடங்களுக்கு செய்திருக்க வேண்டும் என்ற கோட்பாட்டை நாங்கள் கூறி வருகின்றோம்.

ஏனெனில் - அந்தப் பிரதேசம் ஏனைய பிரதேசங்களில் வாழ்கின்ற மக்களுடைய பொருளாதாரத்துடன் போட்டி போட முடியாத நிலையாக உள்ளது. ஆனாலும் எந்த விதத்திலேயும் ஒரு விசேட செயற்பாடு எதுவுமே நடைபெறவில்லை. ராஜபக் ஷ தரப்பு காலத்தில் இந்த விடயங்களை நாங்கள் எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் -அவர்களுடைய மனோநிலை முற்றிலும் தமிழர்களுக்கு எதிரானதாகவே இருந்தது. ஆனால் ரணில் விக்கிரமசிங்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு சேர்ந்து ஆட்சி புரிந்த நேரத்தில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு எதிர்க்கட்சியில் இருந்தும்கூட முழுமையாக ரணில் தரப்பை ஆதரித்துக் கொண்டிருந்த காலத்தில் வரவு செலவு திட்டத்தில் வடக்கு கிழக்குக்கு என விசேடமாக நிதி ஒதுக்கப்படவில்லை என்ற விடயங்களையும் கூட்டிகாட்டினோம்.

நாங்கள் கேட்பது ஒரு விசேட ஏற்பாட்டையேயாகும். அவ்வாறு வரவுசெலவுத்திட்டத்தில் ஒரு சதமும் வடக்கு கிழக்குக்கு ஒதுக்கப்பட்டிராத நிலையில் - மக்கள் மட்டத்தில் குழப்பங்கள் ஏற்பட்ட நிலையில் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், தங்களால் தமது தொகுதிகளுக்கு போகமுடியவில்லை என்றும், அப்படிப்பட்ட ஒரு நிலையை நீங்கள் உருவாக்கியிருக்கிறீர்கள் எனவும் ஆளும் தரப்பிடம் கூறியபோது, நாங்கள் வரவு,செலவு திட்டத்தில் இந்த விடயத்தை சேர்க்காமல், வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மூலம் விசேட செயற்திட்டத்தினை செய்து வடக்குகிழக்கைகட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப் போகின்றோம் என்று 2015 இல் குறிப்பிட்டார்கள். ஆனால் 2020 வரைக்கும் 52 நாட்கள் ஏற்பட்ட குழப்பத்தை நீக்கி பார்த்தால் எந்தவொரு ஏற்பாடும் நடைபெற்றிருக்கவில்லை.

வெறுமனே சில நூறு மில்லியன்களை தங்களது எடுபிடிகளுக்கும், தமது ஆட்சியில் இருந்தவர்களுக்கும் வழங்கி தமது வாக்கு வங்கியைத் தக்க வைப்பதற்காக கொடுக்கப்பட்டது. அந்த நிதிகள் தாங்கள் ஏதோ செய்வதுபோல காட்டுவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டதே தவிர, போரால் பாதிக்கப்பட்ட ஒரு பிரதேசத்தைகட்டியெழுப்புவதற்கான எந்தவொரு ஏற்பாடும் செய்யப்படவில்லை. அப்படிப்பட்ட ஒரு பின்னணியில்தான் இந்த வரவு செலவுத் திட்டம் இன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த வரவு,செலவுத் திட்டத்தில் முதற் தடவையாக வடக்கு கிழக்கிற்கு 4 தலைப்புக்களின் கீழ் - பூநகரி சுண்ணக்கல் செயற்பாடு, காணாமல் ஆக்கப்பட்டோருக்கு ஒரு பில்லியன் ஒதுக்கீடு, பாலியாறு தண்ணீர் திட்டம், 2500 மில்லியன் வீட்டுத் திட்டத்துக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த ஒதுக்கீடு ஒட்டுமொத்த வரவு செலவுத் திட்டத்தில் 0.11 வீதமேயாகும். இந்தநிலையில்தான் இனப்பிரச்சினைக்கு காணி பொலிஸ் அதிகாரமற்ற மாகாண சபை 13ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதாக உலகத்துக்கு பூச்சாண்டி காட்டிக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால் அந்தப் பேச்சுக்குப் போனவர்கள் இங்கே இருக்கிறார்கள். பேச்சுக்குப் போனவர்களிடம் ஏதோ செய்யப்போவதாக கூறிய நிலையில், அவர்களும் ஏதோ தரப்போகிறார்கள் என்றே கதைகளைச் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள்.

இந்த நிலையில் கிழக்கு மாகாணத்துக்கும் 1.17 வீதம் நிதிதான் ஒதுக்கப்பட்டுள்ளது. வடமாகாணம் ஊவாமாகாணத்துக்கு அடுத்து அடிநிலையில் இருக்கிறது. ஆனால் வடக்கு மாகாணம் போரால் பாதிக்கப்பட்ட பிரதேசமாக உள்ளது.

இனப்பிரச்சினைக்கு தீர்வு வழங்கப்போவதாக சொல்லும் நிலையில்கூட வடக்கு கிழக்குக் கான விசேட கட்டமைப்பை உருவாக்குவதற்கு இந்த ஆட்சி தயாரில்லை என்றால் ஆளும் தரப்பினரின் மனோநிலையை நாம் நன்கு புரிந்துகொள்ளலாம்.

தற்போதைய வரவுசெலவுத்திட்டம் ஒரு கற்பனையான வரவு செலவுத் திட்டம் எனவும், உரிய பட்சம் அவர்கள் கூறியுள்ள இலக்குகளை அடையக்கூடிய வகையில் அமையவில்லை என்றும் பிட்ச் ஆய்வு மையம் கூறியுள்ளது. இதே பிட்ச் ஆய்வு மையம் தான் இரண்டு வருடங்களுக்கு முன்பு இலங்கையில் பொருளாதார நெருக்கடி ஏற்படப்போவதாக முன்னரேயே எதிர்வுகூறியிருந்தது. குறித்த வரவு செலவுத்திட்டம் கற்பனையானது மற்றும் சாத்தியமற்றது என ஆய்வுகள் சொல்கின்ற நிலையில், ஒப்புக்காக சொல்லப்பட்டுள்ள இந்த ஒதுக்கீடுகள்கூட கிடைக்கும் என்பது சந்தேகத்திற்கிடமானது.

இப்படிப்பட்ட பின்னணியில், இந்த விடயங்கள்; தமிழ் மக்களுக்கு ஏமாற்றமாக இருக்கும் இடத்தில், வரவு,செலவுத்திட்டம் கற்பனையாகப் பார்க்கப்படும் நிலையில் இந்த வரவு, செலவுத் திட்டம் ஏற்கப்படும் நிலையில் இல்லை. இதனால் எமது அமைப்பு இந்த வரவு, செலவு திட்டத்தை எதிர்க்கிறது என்றார்.

## ராஜபக்ஷக்களுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறுவதாக இருந்தால் நாடாளுமன்றத்தில் உள்ள 225 பேரும் பொறுப்புக்கூற வேண்டும்.

சர்வதேச நாணய நியதித்திடம் செல்வாதா இல்லையா என்பது ஆளும் தரப்பின் கொள்கையாகும். அதுவொரு அரசியல் விடயமாகும். சிலருக்கு அது சரியானதாக இருக்கலாம். சிலருக்கு அது தவறானதாக இருக்கலாம். ஆகவே எந்த நேரத்தில் சர்வதேச நாணய நிதியத்துக்கு செல்லவேண்டும் என்பதை எவராலும் மதிப்பிட முடியாது.

இந்த நாட்டில் வரியை அதிகரித்தாலும் குற்றமாகும். வரியைக் குறைத்தாலும் குற்றமாகும். ஆகவே அரசமைப்பின் 29ஆவது பிரிவை பாதுகாப்பதா இல்லையென்றால் அதனை வேறொரு பிரிவுக்கு பிரித்தளிப்பதா என்பதை நாம் தீர்மானிக்க வேண்டும். அதற்காக தேவையெனில் சட்டமொன்றை இயற்றி நாம் வழங்க முடியும்.

அதேநேரம், ஆளும்தரப்பின் கொள்கையும், தீர்மானமும் மீறப்படுகின்றபோது அது தொடர்பில் நாடாளுமன்றம் தீர்மானம் எடுக்க வேண்டியது அவசியமாகின்றது. நாம் நீதிமன்ற தீர்ப்புக்களை மதிக்கின்றோம் என்பதை தெளிவாகக் கூறுகின்றோம். ஆனால் அந்தத் தீர்ப்புக்கள் தொடர்பான சட்ட ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ள விரும்புகின்றோம் என்றார்.

## சீனாவின் பாதை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேன் யிங்க் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவைச் சந்தித்தார். அப்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டம் உட்பட இலங்கைக்குச் சீனா வழங்கும் ஆதரவைப் பாராட்டிய ஜனாதிபதி, அதற்காக சீன ஜனாதிபதிக்கும் அவரது ஆட்சிக்கும் நன்றி தெரிவித்தார்.

அத்துடன், சுற்றுலா, விளையாட்டு, விவசாயம் ஆகிய துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை அதிகரிப்பதே இலங்கையின் எதிர்பார்ப்பு எனத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் துறைமுக நகரம் என்பன இன்று முதலீட்டுக்குத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

பொருளாதார ரீதியில் அதிக பங்களிப்பை வழங்கக்கூடிய பாதை மற்றும் மண்டலம் திட்டத்தின் இரண்டாவது கட்டத்திற்குள் பிரவேசிப்பதற்கு அதன் பங்காளரான இலங்கை போன்ற நாடுகள் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார் .

பிராந்திய விரிவான பொருளாதார பங்காளித்துவத்திற்குள் பிரவேசிக்க இலங்கை எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்தும் ஜனாதிபதி விளக்கினார்.

இந்து சமுத்திரம், கடற் பயணத்திற்கான சுதந்திர வலயமாக இருக்க வேண்டும் எனவும் புவிசார் அதிகாரப் போட்டியின்றி அமைதியான வலயமாக பேண இலங்கை அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேலும் தெரிவித்தார்.

சீனா-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை மிக விரைவில் நடைமுறைப்படுத்தவும் இருதரப்பும் உடன்பாடு தெரிவித்தன.

இலங்கைக்கு சீனாவின் தொடர்ச்சியான ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்திய ஷென் யிங்க், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் வலியுறுத்தினார்.

இந்தச் சந்திப்பில் ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான பணிப்பாளர் தினுக் கொழும்பகே ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## கைது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அச்சத்தில் பொலிஸ் நிலையத்தின் பாதுகாப்பு நேற்றுப் பலப்படுத்தப்பட்டிருந்தது.

உயிரிழந்த சந்தேகநபரின் உடலில் அடி காயங்கள் காணப்படுகின்றன என்றும் அவர் இயற்கையாக உயிரிழப்பதற்கான காரணம் எதுவும் இல்லை என்றும் அடிவயிற்றுப் பகுதிகளில் கடுமையாகத் தாக்கப்பட்டதற்கான அடையாளங்கள் காணப்படுகின்றன என்றும் உடற்கூறாய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடுமையாகத் தாக்கப்பட்டதன் காரணமாக சிறுநீரக, நுரை யீரல் செயலிழப்பு ஏற்பட்டு இறப்புச் சம்பவித்திருக்கலாம் என்கிற சந்தேகத்தின் பேரில் உயிரிழந்தவரின் உடற்பாகங்களை மேலதிக பரிசோதனைகளுக்காக கொழும்புக்கு அனுப்பிவைக்க யாழ்ப்பாணம் சட்டவைத்திய அதிகாரி பரிந்துரை செய்துள்ளார்.

உயிரிழந்தவர் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த நாகராசா அலெக்ஸ் (வயது 26). திருட்டுச் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றத்தால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். சிறையிலிருந்தபோது சுகவீனமுற்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அங்கு அவர் உயிரிழந்தார்.

திருட்டு வழக்கு ஒன்று தொடர்பாக அலெக்ஸும் மற்றொருவரும் வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர் என்றும் ஆனால் 4 நாள்களாகியும் அவர்கள் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுமில்லை, வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையக் காவலிலும் இல்லை என்றதை அடுத்து தாம் மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் முறையிட்டனர் என்றும் குடும்பத்தினர் தெரிவிக்கின்றனர்.

மனித உரிமைகள் ஆணைக்குழு தலையிட்டதை அடுத்து கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். விளக்கமறியலுக்காக, யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த சமயமே அலெக்ஸ் சுகவீனமுற்று வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டார். ஞாயிற்றுக்கிழமை அங்கு அவர் உயிரிழந்தார்.

தான் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த நாள்களில் கடுமையாகத் தாக்கப்பட்டார் என்று வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும்போது அலெக்ஸ் தெரிவித்தார் என்று கூறப்படும் காணொலி ஒன்று சமூக ஊடகங்களில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது. இதனைத் தொடர்ந்து அலெக்ஸின் உயிரிழப்புக்கு வட்டுக்கோட்டைப் பொலிஸாரே காரணம் என்ற குற்றச்சாட்டு எழுந்தது.

அந்தக் காணொலியில் தனது கைகள் இரண்டையும் பின்புறமாகக் கட்டிவிட்டு உயரத் தூக்கித் தாக்கினார்கள் என்றும் பெற்றோல் ஊற்றிய பொலித்தீன் பையால் முகத்தை மூடி சித்திரவதை செய்தார்கள் என்றும் முகத்தை மூடிக்கட்டிவிட்டு தண்ணீர் ஊற்றித் தாக்கினார்கள் என்றும் அலெக்ஸ் கூறும் காட்சிகள் உள்ளன என்று கூறப்படுகின்றது.

தாக்கப்பட்ட பின்னர் தனக்குச் சாராயம் தந்தார்கள் என்றும் தாக்கியது குறித்து வெளியே சொல்லக்கூடாது என்று மிரட்டினார்கள் என்றும் தாக்கப்பட்டதற்குப் பின்னர் தன்னால் சாப்பிட முடியவில்லை என்றும்கூட அந்தக் காணொலியில் அலெக்ஸ் கூறியிருக்கிறார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவங்கள் அனைத்தும் வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் வைத்தே நிகழ்ந்தன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

குற்றச்சாட்டுக்களை அடுத்து அது குறித்து விசாரிக்க யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் ஒரு விசாரணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மனித உரிமைகள் ஆணைக்குழுவும் இது தொடர்பான தனது விசாரணைகளைத் தொடக்கியுள்ளது. இவற்றுக்கு மேலதிகமாக சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்த கொழும்பில் இருந்தும் பொலிஸ் அதிகாரிகள் குழு ஒன்று வருகை தந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இருவர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்த அலெக்ஸின் சடலம் நேற்றுப் பிற்பகல் பொலிஸ் பாதுகாப்புடன் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. இந்த உயிரிழப்புக் காரணமாகப் பொலிஸாருக்கு எதிராகப் போராட்டங்கள் இடம்பெறக்கூடும் என்கிற அச்சம் காரணமாக வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தின் பாதுகாப்பு நேற்று அதிகரிக்கப்பட்டது. பொலிஸ் நிலையம் முன்பாக வீதித் தடைகள் போடப்பட்டன. ஆயுதம் தாங்கிய விசேட அதிரடிப்படையினரும் காவலுக்கு நிறுத்தப்பட்டிருந்தனர்.

## எதிர்க் கட்சிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடைந்துள்ளது. அத்துடன் சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவணையைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பும் கிடைத்துள்ளது.

மக்களுக்கு நிவாரணம் கிடைக்காது என எண்ணிய எதிர்க்கட்சிகளின் கனவை

தொடர்ச்சி 9ம் பக்கம்...



காலைக்கதிர் Kalaikkathir

# போக்குவரத்து ஊடக அமைச்சரினால் தரமுயர்த்தப்பட்ட பொத்துவில் டிப்போ












ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின் பேரில் திகாமடுல்ல நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முசாரபின் முயற்சியில் பொத்துவில் உப பஸ் டிப்போ பிரதான டிப்போவாக ஞாயிற்றுக்கிழமை போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவால் தரம் உயர்த்தப்பட்டது.

புதிய பொருளாதார மூலோபாயங்களை வலுப்படுத்துவதற்காக பொத்துவில் மற்றும் அறுகம்பே சுற்றுலா வலயத்தை ஒருங்கிணைத்து போக்குவரத்து சேவையை மேம்படுத்துவதற்காக பொத்துவில் உப பஸ் டிப்போ பிரதான டிப்போவாக தரம் உயர்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது பொத்துவில் பஸ் டிப்போவுக்கு போக்குவரத்து அமைச்சரால் நவீன சொகுசு பஸ் வழங்கி வைக்கப்பட்டதுடன் 60 மில்லியன் ரூபா செலவில் புதிய கட்டடத்திற்கான அடிக்கல்லும் நாட்டி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் -

நாடாளுமன்ற உறுப்பினரும், அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான டபிள்யு. டி.வீரசிங்க, இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் பொறியியலாளர் லலித் டி அல்விஸ், போக்கு-வரத்து சபையின் உயர் அதிகாரிகள், அரசாங்க அதிகாரிகள், திணைக்களங்களின் தலைவர்கள், ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்கள் நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர்கள் உள்ளிட்ட பலரும் இதில் கலந்துகொண்டு கொண்டு சிறப்பித்தனர்.

இந்நிலையில் குறித்த பஸ் டிப்போவின் துரித அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கான முதற் கட்ட நிதியாக சுமார் 60 மில்லியன் ரூபாவை நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முாரப்பின் வேண்டுகோளுக்கமைய ஜனாதிபதி ரணில் விக்ரம சிங்கவின் பணிப்புரைக்கமைய ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆரம்பக் கட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (05)

## இலங்கை கிரிக்கெட் நிறுவன பிரச்சினை தொடர்பில் அனைத்து தரப்புடனும் பேச்சு

### அமைச்சர் டிரான் தகவல்



இலங்கை கிரிக்கெட் நிறுவனப் பிரச்சினை தொடர்பில் அதனுடன் தொடர்புபட்ட அனைத்து தரப்புடனும் அமைச்சரவை உபகுழு பேச்சுக்களை நடத்துமென்று அதன் உறுப்பினர்களில் ஒருவரான அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் பிரச்சினைகள் தொடர்பில்கலந்துரையாடுவதற்கு வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தலைமையிலான அமைச்சரவை உபகுழுநியமித்துள்ளார். அந்தக் குழுவில், அமைச்சர்களான டிரான் அலஸ், மனு நாணயக்கார மற்றும் காஞ்சன விஜேசேகர ஆகியோரும் உறுப்பினர்களாக உள்ளனர்.

இந்நிலையில் குறித்த குழுவின் அடுத்தகட்டச் செயற்பாடுகள் தொடர்பில் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். முறையானதொரு மாற்றம் ஏற்பட வேண்டும். அது சட்டத்துக்கு உட்பட்டதாக அமைய வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார்.

அந்த அடிப்படையில் தான் தற்போது அமைச்சரவையின் உபகுழு நியமிக்கப்பட்டுள்ளது. எனவே, அமைச்சரவை உபகுழு, விரைவில் கிரிக்கெட் நிறுவனத்துடன் தொடர்புடைய அனைத்து தரப்பினரையும் சந்தித்து உரையாடவுள்ளது. இந்தக் கலந்துரையாடல் அரசியல் பேதங்களுக்கு அப்பாற்பட்டதாக நிச்சயமாக காணப்படும்.

விசேடமாக, இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தடை தொடர்பிலும், சர்வதேச கிரிக்கெட் சபையுடன்கலந்துரையாடவுள்ளது. இதற்கான செயற்பாட்டு நிகழ்ச்சி நிரல்கள் விரைவில் இறுதி செய்யப்படவுள்ளன. - என்றார். (05)

## அமைச்சர் ரொஷானின் பாதுகாப்பு அதிகரிப்பு: 10 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில்



விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர் ரொஷான் ரணசிங்கவின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

அமைச்சர் ரொான் ரணசிங்க அண்மைக்காலமாக தனது பாதுகாப்பு தொடர்பில் விசேட கரிசனைகளை வெளியிட்டதோடு, கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றத்திலும் விசேட கூற்று ஒன்றின் ஊடாக பாதுகாப்புக் கரிசனைகளை வெளியிட்டிருந்தார்.

இந்நிலையில் குறித்த விடயம் சம்பந்தமாக விடயதானத்துக்கு பொறுப்பானஅமைச்சர்என்றவகையில் டிரான் அலஸ் பதிலளிக்கையில் -

அமைச்சர் ரொான் ரணசிங்கவின் பாதுகாப்பு தொடர்பில் கரிசனைகளை வெளிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அவருக்கு தற்போது பத்து பொலிஸ் அதிகாரிகள் உள்ளிட்ட பாதுகாப்பு பணிக்குழாம் வழங்கப்பட்டுள்ளது. - என்றார்.

இதேவேளை, அமைச்சர்ஒருவரின் பாதுகாப்புக்காகக் குறைந்த பட்சம் ஏழு பொலிஸ் அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்படுவார்கள். அமைச்சர் ஒருவருக்கு உயிர் அச்சுறுத்தல் இருக்கின்றது எனக் கோரிக்கை விடுக்கப்படும் சந்தர்ப்பத்தில் அவரது பாதுகாப்பு அதிகரிக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

அதற்கமைய விளையாட்டுத்துறை அமைச்சரின் பாதுகாப்புக்குக் கூடுதலாக மூன்று பொலிஸ் அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும், தற்போது அவரது பாதுகாப்புக்காக 10 பொலிஸ் அதிகாரிகள் உள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ மேலும் தெரிவித்தார். (05)

## மோட்டார் சைக்கிளைத் திருடிச் சென்ற இரு மாணவர் பொலிஸாரிடம் சிக்கினர்

### மீகொடவில் சம்பவம்

மீகொட, கொம்பயாஹேனேயில் உள்ள வீடொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை திருடிச் சென்றனர் எனக் கூறப்படும் இரு மாணவர்களை தமது பொறுப்பில் எடுத்துள்ளதாக மீகொட பொலிஸார் தெரிவித்தனர்.

கொம்பயஹேன பிரதேசத்தை வசிப்பிடமாகவும் கொடகம பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்பவர்களுமான 16 மற்றும் 17 வயதுடைய இரு மாணவர்களே பொலிஸ் பொறுப்பில் எடுக்கப்பட்டவர்களாவர்.

மீகொட பொலிஸ் நிலையத்தின் இலஞ்ச ஊழல் ஒழிப்பு பிரிவின் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட குழுவொன்று கொம்பயஹேன பிரதேசத்தில் விசேட சுற்றிவளைப்புக்கு சென்றது.

இந்தச் சந்தர்ப்பத்தில், சந்தேகத்துக்கிடமான வகையில் இலக்கத் தகடு இன்றி வீதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று வேகமாகச் செல்வதைக் கண்டு, அவர்களைப் பின்தொடர்ந்து சென்று நிறுத்தி விசாரணை மேற்கொண்ட நிலையிலேயே இருவரையும் மோட்டார் சைக்கிளுடன் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர். (05)

## பாரவூர்தியுடன் இ.போ.ச. பஸ் வவுனியாவில் மோதி விபத்து

### மூவர் காயம்

வவுனியா, ஓமந்தையில் பாரவூர்த்தியுடன் இ.போ.சபை பஸ் மோதி விபத்துக்குள்ளாகியதில் மூவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்ற இந்த விபத்து குறித்து மேலும் தெரியவருவதாவது -

யாழில் இருந்து வவுனியா நோக்கி சென்ற பாரவூர்த்தி ஓமந்தைப் பகுதியில் பயணித்த போது வீதியில் படுத்திருந்த மாடுகளுடன் மோதி விபத்து ஏற்படுவதை தடுக்கும் வகையில், பாரவூர்தியை செலுத்திய போது அதே வழியில் வந்த இ.போ.சபை பஸ் வேகக் கட்டுப்பாட்டையிழந்து பாரவூர்தியுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதனையடுத்து பாரவூத்தி வீதியை விட்டு விலகி தடம்புரண்டுள்ளது. இவ்விபத்தில் பாரவூர்த்தியில் பயணித்தசாரதிமற்றும்நடத்துநர்காயமடைந்ததுடன், பஸ்ஸில் பயணித்த பயணி ஒருவரும் காயமடைந்துள்ளார். காயமடைந்த மூவரும் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்து தொடர்பில்ஓமந்தைப்பொலிஸார்விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (05)

## மணல் அனுமதிப்பத்திர மோசடியில் 2 பேர் கைது



போலி மணலேற்றும் அனுமதிப் பத்திரங்களைப் பயன்படுத்திய குற்றச்சாட்டில்கிளிநொச்சியைச்சேர்ந்த இருவர் யாழ். மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஒரு மணல் அனுமதிப் பத்திரம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போதே அந்தப் பத்திரம் போலியானது என்று கண்டறியப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அடிப்படையில் கிளிநொச்சி மற்றும் விசுவமடுவைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போலியான அனுமதிப் பத்திரம் என்று தெரிந்தும் அதை ஒருவருக்கு வழங்கியமை, போலியான அனுமதிப் பத்திரம் என்று தெரிந்தும் அதை பயன்படுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் கீழ் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போலியான அனுமதிப் பத்திரம் ஒன்றுக்காக சுமார் 15 ஆயிரம் ரூபா வரையில் அறவிடப்பட்டுள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## முழுமையான விசாரணை வேண்டும்

வட்டுக்கோட்டையில் இளைஞர் ஒருவர் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டன பின்னர் உயிரிழந்த விவகாரம் பதற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது. கைது செய்யப்பட்ட சந்தேகநபர் காவலர்களால் தாக்கப்பட்டார் என்றும் அதனாலேயே உயிரிழந்தார் என்றும் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. அவரது உடலில் தாக்கப்பட்டதற்கான அடையாளங்கள் காணப்படுகின்றன என்று உடற்கூறாய்வு அறிக்கையும் உறுதிப்படுத்தியிருக்கின்றது. தாக்கப்பட்டதனால்தான் சந்தேகநபர் உயிரிழந்தாரா என்பதை உறுதிப்படுத்துவதற்கான மருத்துவ அறிக்கைகளுக்காக இன்னும் காத்திருக்கவேண்டியதாக உள்ளது.

காவல்நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தசமயம் தான் கடுமையாகத் தாக்கப்பட்டார் என்று கூறப்படும் காணொலி சமூக ஊடகங்களில் பரவிவருவதாகவும் கூறப்படும் நிலையில் உண்மை என்ன என்பதை அறிவதற்கான முழுமையான விசாரணை நடத்தப்படுவது அவசியம்.

காவல்துறையினர் மீது இத்தகைய தாக்குதல் மற்றும் சித்திரவதைக் குற்றச்சாட்டுக்கள் எழுவது இது முதல்முறையுமல்ல, புதிதுமல்ல. இலங்கை காவல்துறைவிசாரணைகளுக்காகசித்திரவதையை ஒரு வழிமுறையாகப் பின்பற்றி வருகின்றன என்பதை பன்னாட்டு மனித உரிமைக் குழுக்கள் நீண்டகாலமாகவே குற்றஞ்சாட்டி வருகின்றன. சித்திரவதைகள் தொடர்பில் இலங்கைக் காவல்துறையினரிடம் திட்டமிட்ட பொறிமுறை ஒன்று உள்ளதாகவும் அவை ஏற்கனவே பல தடவைகள் சுட்டிக்காட்டியுள்ளன.

விசாரணைகளை மேற்கொள்வதற்கான போதிய அறிவின்மை, நவீன விசாரணை முறைமைகள் பற்றிய பயிற்சிகளின் போதாமைகள் மற்றும் சித்திரவதையின்றி, அதாவது ஒப்புதல் வாக்குமூலத்தைப் பெறாமல் குற்றத்தை நிரூபிப்பதற்கான நவீன சட்ட மற்றும் தொழில்நுட்ப வசதிகளும் அறிவு இல்லாமை என்கிற பல காரணங்களால் காவல்துறையினர் விசாரணைகளுக்கான இலகுவான வழியாக சித்திரவதையைத் தேர்ந்தெடுக்கிறார்கள் என்று கூறப்படுகின்றது.

எத்தகைய காரணங்களாக இருந்தாலும் காவல்துறையினரின் சித்திரவதை காரணமாக ஒருவர்உயிரிழப்பதைஎப்படியும்அனுமதிக்கமுடியாது. இதற்கு முன்னரும் இதுபோன்று சந்தேகநபர் ஒருவர் தாக்கப்பட்டு உயிரிழந்ததை அடுத்து அவரது சடலத்தை குளத்தில் வீசி குற்றத்தை மறைக்க எடுக்கப்பட்ட முயற்சி நிரூபிக்கப்பட்டு அதற்குக் காரணமானவர்கள் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டுமிருக்கிறர்கள்.

மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக நீடித்த போரின்போது காவல்துறையினர் பொது நிர்வாக அலுவல்களையும்தாண்டி போர்த் தொழிலுக்குப் பழக்கப்படுத்தப்பட்டதன் பக்க விளைவாகவும் இந்தத் தாக்குதல்களை நோக்க வேண்டியதும் அவசியமாகின்றது.

வட்டுக்கோட்டைத் தாக்குதல் தொடர்பில் உடனடியாக இரு காவல்துறையினர் இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது. இத்தகைய பாரதூரமான குற்றங்களுக்கு இடம்மாற்றம் ஒருபோதும் தீர்வாக அமையாது. இன்னும் சொல்லப்போனால் அது குற்றமிழைத்தவர்களுக்கு ஒரு ஊக்கமாகவே அமையும். எனவே குற்றஞ்சாட்டப்படுபவர்கள் அனைவரும் உடனடியாக சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டு முழுமையான விசாரணைகள் நடத்தப்படவேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் கிடைக்கவேண்டும். அதுமட்டுமல்ல அவர்கள் நீதியின் முன் நிறுத்தப்பட்டு முறைப்படி தண்டிக்கப்படவும்வேண்டும்.

# கற்பகதரு என்னும் அற்புதம்

# பனையின் சுவையான பழம்

அங்கம் – 23



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா.

சுட்ட பழம் வேண்டுமா ? சுடாத பழம் வேண்டுமா ? என்று தமிழ் மூதாட்டி ஔவையாரிடம் முருகப்பெருமான் கேட்டு - ஔவையினையே சிந்திக்க வைத்தார் என்று வழமையாக ஒரு கதை வழங்கி வருவதை அனைவரும் அறிவோம். அது நாவற்பழம். நாம் இங்கே பார்க்க இருப்பது பனம்பழம். பனம்பழத்தைச் சுட்டும் சுவைக்கலாம். சுடாமலுமேசுவைக்கலாம். அந்தப் பனம்பழம் பற்றி முருகனிடம் மாட்டிக் கொண்ட ஔவைப் பாட்டி பாடியிருக்கிறார் என்றும் அறிகின்றோம்.

திங்கட் குடையுடைச் சேரனும் சோழனும்
பாண்டியனும்
மங்கைக் கறுகிட வந்துநின்றார் மணப்
பந்தலிலே
சங்கொக்க வெண்குருத்து ஈன்று
பச்சோலை சல சலத்து
நுங்குக்கண் முற்றி அடிக்கண் கறுத்து
நுனி சிவந்து
பங்குக்கு மூன்று பழம் தரவேண்டும்
பனந்துண்டமே

பனம்பழத்தை விரும்பிக் கேட்ட மூவேந்தர்களுக்கும் உடனேயேபனம்பழம்கிடைக்கும் வண்ணம் ஔவைப்பாட்டி பாடிய பாடல்தான் இப்பாடல். ஔவையின் இப்பாடல் எங்கள் நவாலியூர் புலவரின் மனதிலும் பதிந்து விட்டது. அவர் பனையைப்பற்றிபலபாடல்களைப் பாடியிருக்கிறார். அவரின் கவித்துவத்தில் பனம்பழம் மட்டும் இடம் பெறாமல் போய்விடுமா ! அவரும் தன் கருத்தைப் பாட்டாக்கி வழங்குகின்றார்.

திங்கட் குடையுடைச் சேரனும் சோழனும்
பாண்டியனும் ஔவை சொற்படியே
மங்கலமாயுண்ட தெய்வப் பனம்பழம்

பனம்பழத்தை எங்கள் நவாலியூர் தங்கத்தமிழ்த் தாத்தா தெய்வப் பனம்பழம் என்று பெருமையுடன் சொல்லுவதைக் கருத்திருத்த வேண்டும். பனம்பழத்தை அந்தளவுக்கு சிறப்பான பழமாக அவர் எமக்கெல்லாம் காட்டுகின்றார்.

ஔவைப் பாட்டியின் பாட்டினை உள்வாங்கி பனம்பழம் பற்றிய தன் னுடைய பார்வையினை எங்கள் தங்கத்தாத்தா காட்டியதைப் பார்த்தோம்.சங்க இலக்கியமான நற்றிணையும் பனம்பழத்தை விட்டுவைக்கவில்லை.நற்றிணை பனம் பழத்தை எப்படிப் பார்க்கிறது என்பதை நோக்குவோமா !

அழிதக்கன்றே தோழி கழி சேர்பு
கானற் பெண்ணைத் தேனுடை அழி பழம்
வள் இதழ் நெய்தல் வருத்த மூக்கு இறுபு
அள்ளல் இருஞ் சேற்று ஆழப் பட்டென
கிளைக் குருகு இரியும் துறைவன் வளைக் கோட்டு
அன்ன வெண் மணற்று அகவயின் வேட்ட
அண்ணல் உள்ளமொடு அமர்ந்து இனிது நோக்கி
அன்னை தந்த அலங்கல் வான் கோடு
உலைந்தாங்கு நோதல் அஞ்சி அடைந்ததற்கு

இனையல் என்னும் என்ப மனை இருந்து
இருங் கழி துழவும் பனித் தலைப் பரதவர்
திண் திமில் விளக்கம் எண்ணும்
கண்டல் வேலிக் கழி நல் ஊரே

அழகான கடற்கரை.அந்தக் கடற்கரையிலே அழகான ஒரு சோலை.அந்தச் சோலையிலே உயரமாய் ஒரு பனை மரம் இருக்கிறது. அந்தப் பனை மரத்திலே பனம்பழம் குலை குலையாக தொங்கிக்கொண்டிருக்கிறது. அப்படித் தொங்கிக் கொண்டிருக்கும் குலையில் பனம்பழம் கனியப் பழுத்திருக்கிறது. அந்தப் பனம்பழம் எப்படி இருக்கிறது தெரியுமா தேனுடை அழி பழம் என்று காட்டப்படுவது தான் இங்கு முக்கியம். அதாவது தேன்போல இனிக்கும் பழமாக அங்கு பனம்பழம் காட்டப்படுகிறது. நற்றிணை என்பதே நல்ல காதல் இலக்கியமாகும். அங்கு வேறு பழத்தைக் காட்டாமல் பனம் பழத்தைக் காட்டுவது கற்பகதருவுக்குக் கிடைத்த பெருமை அல்லவா !

தேன்போல் இனிக்கும் பனம்பழம் காம்பு மூக்கு அறுந்து பனை மரத்துக்கு அருகிலே இருக்கின்ற நீர் நிறைந்த அந்தப் பகுதியில் விழுகிறதாம். அந்த நீர் நிலையில்அல்லிப்பூக்கள்நிறைந்து காணப்படு கின்றன. அங்கே கொக்குகளும் நிறைந்து காணப்படுகின்றன. பனம்பழம் உயரத்திலிருந்து நீரினுள் விழும் பொழுது நன்றாகப் பழுத்திருந்த காரணத்தால் உடைகிறதாம். பனம்பழம் விழுந்ததால் அல்லிப் பூக்களும் அதன் இலைகளும் நசுங்குகின்றன. பனம்பழம் விழுந்ததால் அங்கே இருந்த கொக்குகள் பறந் தோடிப் போகின்றனவாம். நன்றாகக் கனிந்த பழமாய் பனம்பழம் விழுந்ததால் அதன் மணமானது அந்த நீர் நிலையெங்கும் பரவி மணத்துக்கொண்டே இருந்ததாம் என்று நற்றிணைப் பாடல் நயமாகக் காட்டி நிற்கிறது. எங்கள் கற்பகதருவின் பனம்பழம் இலக்கியத்திலும்தன்னைநிலைநிறுத்தி நிற்கிறது என்பது கருத்திருத்த வேண்டிய முக்கிய விடயம் அல்லவா! காகம் இருக்கப் பனழ்பழம் விழுந்தது என்னும் பழமொழியினையினையும் மறந்துதான் விடமுடியுமா? பனம்பழம்என்பது எங்களின் பண்பாட்டுப் பழம் என்றுதான்எண்ணிடவைக்கிறது. மூவேந்தர் களுமே வேறு எந்தப் பழத்தையும் ஔவையிடம் திருமணப் பந்தலில் கேட்காமல், பனம்பழம்தான் வேண்டும் என்று கேட்டார்கள் என்றால் அக் காலத்திலே பனம்பழம் எத்தகைய இடத்தைப் பெற்றிருக்கிறது என் பதை நினைத்துப் பார்க்க வேண்டும்.



தென்னையும் காய்க்கிறது. அதன் காயினை தேங்காய் என்று அழைக்கிறோம். தென்னையின் காய் காயாகவேதான் கடைசிவரை இருக்கிறது. காயாக இருக்கும் தென்னையின் காயானது நன்றாக முற்றிய நிலையில் அதனைப் பழத்தேங்காய் என்று அழைக்கும்வழக்கமும்இருக்கிறது. ஆனால் அதனை தேங் காய்ப் பழம் என்று மட்டும் அழைப்பதேயில்லை. பழுத்த என்னும் பதம் மட்டுமே தேங்காயுடன் இணைந்து பழத்தேங்காய் ஆகி நிற்கிறது. ஆனால்பனங்காய்என்று ஒரு பருவம் இருக்கிறது. அந்தப் பனங்காய் முற்றியநிலையில்அது பழமாகி பனம்பழம் என்னும் பெயரினைத் தனக்குரித்தாக்கிக் கொண்டு விடுகிறது. இந்த நிலை தென்னைக்கு இல்லை என்பதுதான்முக்கியம்.பனையுடன் சவால் விடுவதற்கு தென்னை எப்பொழுதும் தயாராகவே இருந்தாலும், முடிவில் பனைதான் வெற்றிப் படியில் முன்னிற்கிறது.அப்படி இருந்தாலும் பனை அமைதியாய் தனது பங்களிப்பை எந்தவிதஆரவாரமுமின்றிஆற்றிய படியேதான் இருக்கிறது. பழத்தேங்காய் என்று அழைத்தாலும் அது பழம் அல்ல. பனம்பழம் என்று அழை க்கும் பொழுது அது பழமாகாவே இருக்கிறது. பழத்தேங்காய் எனும் பொழுது அங்கே பழத்தின் பெயர் மட்டுமே இருக்கிறதே அன்றி பழத்துக்கான

(5ஆம் பககம் பார்க்க..)

# கற்பகதரு என்னும் அற்புதம்..........

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

எந்த அடையாளமுமே இல்லை என்பதுதான் முக்கியம். வெறும் பெயராக இருக்கும் பழத்தேங்காய் பனம்பழத்தின் முன் தலைகுனிந்தே நின்றுவிடுகிறது. பனம்பழமோ மணமாயும் சுவையாயும் மக்களின் மனங்களில் நிறைந்துபோய் அமர்ந்தே விடுகிறது.இது பனைக்குக்கிடைத்த பெருவரமென்றே எடுத்துக் கொள்ளலாம் அல்லவா !

தொப்பென்று விழுந்தான் தொப்பி கழன்றான் என்றுவிடுகதைசொல்லிமகிழுவது எதைத் தெரியுமா ? அது பனம் பழத்தைத் தான். இந்த விடுகதையினை சின்னவயதில் சொல்லி அதற்கான விடையினைத் தேடுவதில் நாங்கள் முனைந்திருந்தோம் என்பது நினைவுக்கு வருகிறதல்லவா ! அந்த அளவுக்கு பனம்பழம் மனதில் பதிந்தே இருந்து வந்திருக்கிறது. பனம்பழக் காலமென்பது ஆவணிமாதம் தொடக்கம் ஐப்பசி மாதம் வரையில் அமைகிறது.பனம்பழத்தை தேம்படு பனையின் திரள் பழம் என்று சங்க இலக்கியமே சுவைத்து நிற்கிறது.இனிமை பொருந்தி இருக்கின்ற காரணத்தாலேயே பனம்பழம்இவ்வாறுவியந்துஅழைக்கப்பட்டது என்பதும் நோக்கத்தது.நுங்கானது முற்றும் பொழுது அது சீக்காய் ஆகிறது.அச்சீக்காய் முற்றிய நிலையில்த்தான் பனம்பழம் ஆக வருகிறது.பனம்பழங்கள் ஒவ்வொன்றுமே கிட் டத்தட்ட ஆறு அங்குலம் தொடக்கம் எட்டு அங்குலவிட்டமுள்ளதாகவும், குலைகளாகவும் பனையில் காணப்படுகி றது.பனம்பழம் நார்த்தன்மை மிக்கதாக இருக்கிறது.பழமென்று பெயர் பெற்றாலும் பனம் பழத்தின் மேற்றோல் கறுப்பு நிறமாகவே காட்சிதருகின்றது. இதுஇயற்கையின்நியதிஎன்றுதான்எண்ணிட வேண்டி இருக்கிறது.

பழமாக இருந்தாலும் கறுப்பையே தனக்கு உரித்த்தாக்கி நிற்கிறது பனம்பழம். பனபழத்தில் அமைந் திருக்கும் விதைகளின் தன்மையினைப் பொறுத்து அவை சிறப்புப் பெயரால் அழைக்கப்படுவதும் நோக்கத்தக்கது. ஒருவிதையைவிட, இருவிதைகள் இருப்பதை இருக்காலிப் பழம் என்றும் மூன்றுவிதைகள் இருப்பதை முக்காலிப்பழம் என்றும் அழைக்கப்பட்டு வருகிறது.அரிதாக சில ஙவளைகளில் நான்கு விதை கள் வந்து விடுவது உண்டு. ஏழுகண்கள் கொண்ட நுங்குகள் அமைவதுபோல் என்று எடுத்துக் கொள்ள லாம்.. நான்கு விதைகளைகள் அமையும் பொழுது அது நான்காலிப்பழம் என்று அழைக்கப்படுகிறது. தென் னையில் ஆண், பெண் என்று வகை இல்லை. ஆனால் பனையானது ஆண், பெண் என்றுவகையாகி இருக் கிறது. பெண் பனைமட்டுமே பனம் பழத்தைக் கொடுக்கும் நிலையில் இருக்கிறது என்பதுதான் முக்கியமானது. பனம்பழமானது சாதாரணமாக அறுநூறு கிராம் தொடக்கம் ஒருகிலோ வரை நிறையுடையதாக இருக்கும்.





பனம்பழம் என்னும் பொழுது அதனைச் சாதாரணமாக எண்ணக் கூடாது. நிலத்தின் தன்மைக்கும் நிலத்தடி நீரின் தன்மைக்கும் ஏற்ப பனம் பழங்களின் நிறத்திலும், சுவையிலும் கூட வேறுபாடுகள் அமைவதாக அறிய முடிகிறது.உதாரண மாக இலங்கையில் யாழ்ப்பாணம், மன்னார், கற்பிட்டி, பிரதேசங்களில் காணப்படும் பனைகளின் பனம்பழமானது பெரிய வித்தியாசம் கொண்டிருப்பதை அறிந்திட முடிகிறது.

நிலம் , நீர் , இவற்றினை மையமாகக் கொண்டு பனம்பழங்களின் தன்மைகள் வேறுபடுகின்றன என்று பார்த்தோம். அப்படி வேறுபடும் நிலையில் பனம் பழங்களின் சுவையின் அடைப்படையில் எங்கள் முன்னோர் சிறப்பான பெயர் களையும் வழங்கியிருக் கிறார்கள்.தோரை, பருப்பை, செருக்கலி, காறலி,

தேனி, பூமணத்தி என்னும் பெயர்களை வழங்கி பனைகளையே இனங்கண்டிருக்கிறார்கள் எங்கள் முன்னோர்கள். சுவையினைப் பொறுத்து பனைக்குப். பெயரிட்ட எங்கள் முன்னோரின் திறனை நிச்சயம் பாராட்டியே ஆகவேண்டும்.பூமணத்தி வகையானது மலர்போல வாசனை மிக்கதாக இருக்கும். தேனி என்னும் வகை யானது தேன் போன்று இனிமை தருவதாக இருக்கும். காறலி என்னும் பொழுது அங்கு காறற் சுவையே வந்து அமையும். இப்படியாகச் சுவையினை மையப்படுத்தியமையினை தொழில்நுட்பம் என்றுதானே எடுத்துக் கொள்ளுதல் வேண்டும்.சுவைமிக்க பனம்பழம் விழும் காலங்களில் அதி காலையிலே எழுந்து பனம்பழத் தைப் பொறுக்குவதற்கு ஓடுவதும் அதனைப் பொறுக்குவதும் கூட ஒரு சுகமாகவும் , அதேவேளை அதே ஒரு பெரும் போட்டியாகவும் இருந்ததையெல்லாம் நினைவில் கொண்டுவந்து பாருங்கள். பனம்பழம் பொறு க்கும் சுவையான காலத்தில் - பொறுக்கும். போட்டியினால் கலகங்களும் ஏற்பட்டிருக்கின்றன என்றும் அறிய முடிகிறது. இப்படிக் கலகங்கள் ஏற்பட்டதையும் சுப்பையனார் என்பவர் பாட்டாகவே பாடிவிட்டார். சுப்பையர் என்பவர் கனகி புராணம் என்னும் ஒரு புராணத்தைப் பாடினார். அதில் பனம்பழத்தால் விளைந்த சண்டையினை எவ்வாறு காட்டுகிறார் பாருங்கள்..

தாலக்கனி யொன்றினுக்காகத் தரைமேல்
மாந்தர் பலர் திரண்டு
வேல் கத்திகள் கொண்டெறிந்து மிக
விஜயம் பொரு வளநாடனே

பனம்பழம் பொறுக்குவதில் ஏற்பட்ட சண்டையினை சுப்பையர் என்பவர் காட்ட , பனம்பழத்தை சமாதன மாகப் பொறுக்கி அதனை எப்படிச் சுவைத்து மகிழ்ந்தார்கள் என்பதை கிருஷ்ண பிள்ளை என்னும் இன்னொருவர் எப்படிக் காட்டி நிற்கிறார் பாருங்கள்.

நாட்டில். வாழும் பலர் கூடிப் பழம்
நழுவி விழும் போததைத் தேடி
கூட்டி வந்ததுமே சுட்டும் காடி
தோய்த்து முண்ணுவாரே கொண்டாடி

( வளரும் )


## குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road, Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 390/=
Chikne Fried Rice with Vegetable - 1160/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Coca Cola Tin - 250/=

# பொலிகண்டி இடம்பெயர்ந்தோர் முகாமில் வெள்ளம் பாதிப்புற்றோருக்கு அவசர உதவி வழங்ககோரிக்கை





வடக்கு மாகாணத்தில் கடந்த ஒரு வார காலத்துக்கு மேலாக நீடித்து வந்த சீரற்ற காலநிலை காரணமாக யாழ்ப்பாணம், வலிகாமம் வடக்கு பகுதியில் இலங்கை இராணுவத்தால்1990ஆம்ஆண்டில்பலவந்தமாக வெளியேற்றப்பட்டு 33 வருடங்களாகத் தற்காலிக முகாம்களில் வசித்து வரும் குடும்பங்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், பாதிக்கப்பட்ட குடும்பங்களின் அழைப்பின் பேரில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் தலைவர் ஜாட்சன் பிகிறாடோ தலைமையிலானகுழுவினர்,குறித்தமக்கள்வெள்ளத்தால் தற்காலிகமாக தங்கவைக்கப்பட்டுள்ள நலன்புரி நிலையம் உட்பட அவர்கள் வசிக்கும் முகாம்களுக்கும் விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

இந்தமுகாம்களில்வசிக்கும்பலகுடும்பங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், அக்குடும்பங்கள் வசிக்கும் பகுதிக்கு அருகில் உள்ள பலர் டெங்கு தாக்கத்துக்கும் உள்ளாகியுள்ளனர்.

இதன்அடிப்படையில்,மிகவும்பாதிக்கப்பட்ட நிலையில் ஆபத்தான குடிசைகளிலும் இடிந்து விழக்கூடிய வீடுகளிலும் வசித்து வரும் மக்களின் தற்போதைய தேவை தொடர்பில் மெசிடோ நிறுவனத்தினர் பாதிக்கப்பட்ட மக்களுடன் கலந்துரையாடினர்.

இந்த முகாம்கள் தொடர்ச்சியாக ஒவ்வொரு மழைகாலங்களிலும் வெள்ளத்தால் பாதிக்கப்படும் நிலையில், சிலருக்கான காணிகள் அவர்களது சொந்த நிலங்களைத் தவிர்த்து வேறு பகுதிகளில் வழங்கப்பட்ட போதிலும் வீடுகளை அமைப்பதற்கு அரசாங்கத்தால் இதுவரை எந்த நிதியும் ஒதுக்கப்படவில்லை.

இதனால் புதிய இடங்களுக்கு செல்ல முடியாத நிலையில் அந்த மக்கள் அகதி முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர்.

மெசிடோ நிறுவனம் கடந்த வருடமும் மக்களின் கோரிக்கைக்கு அமைய, பல்வேறு நிவாரண உதவிகளை வழங்கியது. அதேபோல இம்முறையும் அந்த மக்கள் வெள்ளப் பாதிப்பை தற்காலிகமாக சமாளிக்கும் வகையிலான உதவிகளைப் பெறுவதற்கான ஏற்பாடுகளை செய்து தருமாறு நிறுவனத்தினரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(05)

# எனக்கு எதிரான பாலியல் இலஞ்சக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் நான் பதவியைத் துறப்பேன்

## ரஞ்சித் பண்டார எம்.பி. சவால்

எனக்கு எதிராக எதிர்க்கட்சிகள் முன்வைத்துள்ள பாலியல் இலஞ்சக் குற்றச்சாட்டை முற்றாக மறுப்பதாக கோப் குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் பண்டார தெரிவித்துள்ளார்.

நேற்று (திங்கட்கிழமை) நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அவர் -

தாம் நாடாளுமன்றத்தில் இல்லாத நேரத்தில் இவ்வாறான குற்றச்சாட்டை முன்வைத்ததன் மூலம் எம்.பி. என்ற வகையில் எனது சிறப்புரிமைகள் பாரியளவில் மீறப்பட்டுள்ளன எனத் தெரிவித்தார்.

இது தொடர்பில் சபாநாயகருக்கு எழுத்துமூல அறிவித்தல் வழங்கியுள்ளதாகத் தெரிவித்த ரஞ்சித் பண்டார, சிறப்புரிமைக் குழுவின் முன்னிலையில் உரிய குற்றச்சாட்டை ஆராயுமாறும் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

குற்றச்சாட்டில் தாம் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டால் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்வதாகவும், குற்றச்சாட்டை முன்வைத்த உறுப்பினர் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டால் அவர் தண்டிக்கப்பட வேண்டும் எனவும் ரஞ்சித் பண்டார மேலும் கூறியுள்ளார்.

(05)



## நீதிமன்றத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்ப்பாகும். ஆகவே அதனை யாராலும் சவாலுக்கு உட்படுத்த முடியாது. தீர்ப்புக்கு அப்பால் சென்று நீதிமன்றம் எந்த உத்தரவினையும் வழங்கவில்லை.

நிதி அதிகாரம் நாடாளுமன்றத்திடமே உள்ளது. ஆகவே நிதி தவறாக கையாளப்படும் பட்சத்தில் அதற்கு எதிராக நிறைவேற்று அதிகாரத்தினைக் கொண்டுள்ளவர் நடவடிக்கைஎடுக்கமுடியும். அதனடிப்படையில் நிறைவேற்று அதிகாரத்தினைக்கொண்டுள்ளவரும்நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு அடிபணிந்தாக வேண்டும். தேவையேற்படுகின்றபோது ஜனாதிபதியாலோ அல்லது அமைச்சரவையாலோ விசேட ஜனாதிபதிஆணைக்குழுவொன்றை நியமிக்க மடியும். அதன் பின்னர் பொருளாதாரக் குற்றவாளிகள் பெரும் குற்றங்களைச் செய்தார்கள் என்று நாடாளுமன்றத்திற்கு ஆணைக்குழு பரிந்துரைக்கின்ற பட்சத்தில் ஆகக்குறைந்தது ஏழு வருடங்களுக்கு குடியுரிமையை இரத்துச் செய்ய முடியும்.

குடியுரிமையைஇரத்துச்செய்யும் தீர்மானத்தை அமைச்சரவையின் அனுமதியுடனும், நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடனும் நிறைவேற்ற முடியும். அதற்கு சட்ட ஏற்பாடுகள் உள்ளன என்றார்.

## பிரதமருடனும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீட்டெடுக்க சீனா வழங்கிய ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவித்த பிரதமர் தினேஷ் குணவர்தன, எதிர்காலத்திலும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் சீனா உதவும் என நம்புவதாக குறிப்பிட்டார்.

## யாழ்ப்பாணத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்இந்தநாட்டின்நிரந்தரமான அமைதிக்கு வித்திட்டவர். அவர் ஒரு தேசியதலைவர்.அவ்வாறானதேசிய தலைவரைஅவமானப்படுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஆகவே தேசிய தலைவர் மீதான தவறான விமர்சனங்களைகைவிடவேண்டும் என்றார்.

## நினைவேந்தல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவீரர் வார நிகழ்வுகளுக்குத் தடை விதிக்கவேண்டும் என்று கேட்டு தெல்லிப்பளைப் பொலிஸார் இந்த மனுவை மல்லாகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தனர். அதன் கட்டளைக்காக நேற்றுத் திங்கட்கிழமை வரை அவழக்கு ஒத்தி வைக்கப்பட்டிருந்தது.

நினைவுகூருவது மக்களின் அடிப்படை உரிமை என்றும் நினைவேந்தல்கள் சர்வதேசச் சட்டங்களின்படியும் உள்நாட்டுச் சட்டங்களின்படியும்தடைசெய்யப்பட முடியாதவை என்றும் அப்படித் தடை செய்யப்பட்டால் அது ஹிட்லரின் காலத்தைவிட முசோலினியின் காலத்தைவிட மிக மோசமானதாக இருக்கும் என்றும் பொலிஸாரின் மனுவுக்கு எதிராகத் தமது வாதங்களை முன்வைத்ததைஅடுத்துநீதிமன்றம் நினைவேந்தல்களுக்குத் தடை விதிக்க மறுத்துவிட்டது என்று சட்டத்தரணி சுகாஸ் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மற்றும் பருத்தித்துறை நீதிமன்றங்களில் பொலிஸாரால்தாக்கல்செய்யப்பட்ட வழக்குகளிலும் இதுபோன்று நினைவேந்தல்களுக்குத் தடை விதிக்க ஏற்கனவே மறுப்புத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## கடலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுப்படுத்துமாறு ஆளும் தரப்பிடம் கோருகின்றார்கள். ஆளும் தரப்பில் தமிழர் ஒருவர் கடற்றொழில் அமைச்சராகஇருக்கின்றார். ஆனால் அத்துமீறல்கள் நீடிக்கின்றன.

அவ்வாறு அமைச்சரும், ஆளும் தரப்பும்வேடிக்கைபார்க்கின்றபோது, இன்னும் பலர் அத்துமீறி வந்து மீன்பிடிப்பார்கள். எமது வளங்களை அழிப்பார்கள். ஆகவே ஆளும் தரப்பும், அமைச்சரும் வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பதை இட்டு வெட்கப்பட வேண்டும் என்றார்.



## எதிர்க் கட்சிகளின்...

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

சிதைப்பதில் இவ்வருட வரவு செலவு திட்டம் வெற்றி கண்டுள்ளது.

2024 வரவு, செலவுத் திட்டத்தில் அரச ஊOO-ழியர்களின் சம்பளம் அதிகரிப்பதுடன் சிறுநீரக நோயாளர்கள் மற்றும் அங்கவீனருக்கான கொடுப்பனவுகளையும் அதிகரிக்க முன்மொழியப்பட்டுள்ளது. மேலும் மலையக மக்களுக்கு முழு காணி உரிமை வழங்குதல், பயன்படுத்தப்படாத காணிகளை விவசாயிகளுக்கு வழங்குதல், உயர்கல்வி வாய்ப்புகளை விரிவுபடுத்துதல் போன்ற நீண்ட கால வேலைத் திட்டங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, நவீன உலகிற்குப் பொருத்தமான தொழில் வல்லுநர்களை உருவாக்கும் திட்டங்களும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. மக்களுக்கு வழங்கப்படும் சலுகைகளால் மாத்திரம் ஒரு நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது. அதற்கு நீண்ட கால வேலைத்திட்டங்கள் தேவை. இந்த நீண்ட கால வேலைத்திட்டங்களில் 2034 ஆம் ஆண்டுக்குள் ஆங்கில மொழி அறிவை மேம்படுத்துவதும் அடங்குகின்றது. மேலும், இதில் நேரடி வரிகளை அதிகரிக்கும் திட்டங்களும் முன்மொழியப்பட்டுள்ளன.

மக்கள் இக்கட்டான சூழ்நிலைக்குள் சிக்கிக்கொள்வார்கள் என எதிர்கட்சியினர் எதிர்பார்த்தாலும் நிவாரணங்களை வழங்குதல் என்பதை விட, எவ்வாறு அந்த நிவாரணங்களை வழங்குவது என்ற விடயமே இந்த வரவுசெலவுத் திட்டத்தில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. இந்த வருட வரவு செலவுத் திட்டம் மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்படும் என்பதில் சந்தேகமில்லை. தனிப்பட்ட அரசியல் கருத்துக்கள் எதுவாக இருந்தாலும் நாட்டின் ஸ்திரத்தன்மைக்காக அரசாங்கத்துடன் ஒன்றிணைந்து நாட்டை வெற்றிப் பாதைக்குக் கொண்டு செல்லுமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கின்றேன்.

இந்த விடயத்திற்கு மேலதிகமாக உள்ளூராட்சி மன்றங்களில் இளைஞர்களின் 25 சதவீதப் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் சட்டமூலம் அண்மையில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. பெண்களின் பிரதிநிதித்துவம் அவ்வாறே இருக்கும் வகையில் தனிநபர் பிரேரணையாக இந்த முன்மொழிவை சமர்ப்பித்தேன்.

இது தொடர்பில் எனக்கு எதிராக நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. கடும் குற்றச்சாட்டுகள் மற்றும் அவதூறுகள் இருந்த போதிலும், தொடர்ச்சியான அர்ப்பணிப்புகளினால் எம்மால் அதை நிறைவேற்ற முடிந்தது. ஆனால், இளைஞர்களுக்காக முன்நிற்பதாகக் கூறும் எதிர்க்கட்சிகள், வரவுசெலவுத் திட்டத்திற்குப் பிறகு அதனைக் கொண்டுவர கடுமையாக முயன்றன. அப்படியானால், அடுத்த ஆண்டு வரை இந்த விடயம் தாமதமாகும். அவர்கள் வரவுசெலவுத் திட்டத்தைத் தோற்கடிக்கவே விரும்புகிறார்கள்.

எதிர்கட்சியினர் கூறுவது போல் உண்மையில் அவர்கள் இளைஞர்களுக்காக முன்நிற்கிறார்களா என்ற கேள்வி தற்போது எழுகிறது. எவ்வாறாயினும், இழந்த இளைஞர் பிரதிநிதித்துவத்தை மீண்டும் கொண்டுவர முடிந்ததன் மூலம், நாட்டின் சாதாரண மக்கள் மத்தியில் அரசியல் களத்திற்கு இளைஞர்கள் முன்வருவதற்கான வாய்ப்புக் கிடைத்துள்ளதையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

அடுத்த வருடம் தேர்தல் ஆண்டாக அமையும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். தேர்தலுக்குப் போதிய பணம் இல்லை என நிதி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். ஆனால் விரைவான பொருளாதார வளர்ச்சியுடன், தேர்தல் நடத்துவதற்கான சூழ்நிலைகள் ஏற்படும். ஜனாதிபதியின் அரசியல் தலைமையின் கீழ் தேர்தல் ஆணைக்குழு உரிய காலத்தில் தேர்தல்களை நடத்தும்.

டொலரின் பெறுமதி அதிகரிப்புடன், நாட்டில் பொருட்களின் விலை அதிகரித்த போதிலும், தற்போது அந்நிலைமை ஓரளவுக்கு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஆனாலும் நியாயமற்ற முறையில் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலை அதிகரிப்பது குறித்தும், டொலரின் பெறுமதி குறைவடைந்ததன் பலன் மக்களுக்கு கிடைக்கின்றதா என்பது குறித்தும் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

மூன்றாம் பாலின சமூகங்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கில் தனிப்பட்ட உறுப்பினர் முன்மொழிவாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தண்டனைச் சட்டக் கோவை திருத்தச் சட்டமூலம் தொடர்பான அடுத்த பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவின் முன் இந்த விடயத்தை முன்வைக்க எனக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது. அதன்படி, அதற்கான இரண்டாவது வாசிப்புத் திகதியைப் பெற்றுக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கையும் உள்ளது என்றார்.

## பொருளாதாரத்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களைப்பெறுதல்’ என்பதே இவ்வருட அமர்வின் தொனிப்பொருளாகும்.

நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் தலைவர் பசிந்து குணரத்ன ஆகியோர் முதல்நாள் அமர்வில் பிரதம அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

இளைஞர் நாடாளுமன்ற சபாநாயகருடன் இணைந்து படைக்கள சேவிதர் செங்கோலை எடுத்து சபைக்குள் பிரவேசித்த பின்னர் இலங்கை இளைஞர் நாடாளுமன்றத்தின் ஐந்தாவது அமர்வு ஆரம்பிக்கப்பட்டது. அதன் பிரதமர் பெதும் ரணசிங்க, அமர்வை ஆரம்பித்து வைத்து வரவேற்புரை நிகழ்த்தினார்.

இந்த அமர்வில் இளைஞர் நாடாளுமன்ற சட்டம், அரசியல் அகாடமி மற்றும் பிரதேச அபிவிருத்தி குழுக்களின் பங்கு மற்றும் இளைஞர் நாடாளுமன்றத்தை டிஜிட்டல் மயமாக்குதல் ஆகியவை குறித்துக் கவனம் செலுத்தப்பட்டது.

2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்திற்கான இளைஞர் முன்மொழிவுகள் மற்றும் யோசனைகளை பாராட்டி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் கையொப்பமிடப்பட்ட கடிதமும் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது.

அங்கு உரையாற்றிய நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவித்ததாவது:

மக்கள் வரவேற்கும் தீர்மானங்களை எடுத்து நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் வீழ்ச்சியை நோக்கிக் கொண்டு செல்லும் அவசியம் எமது ஆட்சிக்குக் கிடையாது

தற்பொழுது சமர்ப்பிக்கப்பட்டுள்ள 2024 வரவு, செலவுத் திட்ட ஆவணம் தொடர்பில் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஓரளவு அறிந்திருப்பார்கள் என்று நம்புகின்றோம். தற்போது ஸ்திரமாக உள்ள நாட்டின் பொருளாதாரத்தை முழு ஸ்திரத்தன்மைக்கு கொண்டு வருவதே இந்த ஆண்டு பட்ஜெட்டின் முக்கிய நோக்கமாகும். இதற்கு நாட்டு மக்கள் அனைவரும் பெரும் அர்ப்பணிப்பை வழங்கினார்கள்.

2024ஆம் ஆண்டை பொருளாதார வளர்ச்சி ஆண்டாக மாற்றுவது இந்த ஆண்டு பட்ஜெட்டின் மற்றொரு இலக்காகும். இதற்காக நாட்டு மக்கள் அனைவரும் பெரும் அர்ப்பணிப்புகளை செய்தனர். குறிப்பாக 2022ஆம் ஆண்டை திரும்பிப் பார்த்தால், அந்த கசப்பான மற்றும் விரும்பத்தகாத அனுபவங்கள் இந்த நாட்டில் மீண்டும் ஏற்படுவதை யாரும் பார்க்க விரும்பவில்லை. எனவே, நெருக்கடி நிலை மற்றும் நெருக்கடிக்கு காரணமான காரணங்கள் குறித்து சரியான புரிதலுடன் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்லும் வகையில் இம்முறை வரவுசெலவுத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது.

அதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மிகுந்த உறுதியுடன் தலைமைத்துவத்தை வழங்கியுள்ளார். அவரின் தலைமைத்துவத்துக்கு இந்த நாட்டு மக்கள் ஆதரவளித்துள்ளனர். அவர் எவ்வளவுதான் உறுதியுடன் இருந்தாலும், அந்த உறுதியின் மீது பொதுமக்களுக்கு நம்பிக்கை இல்லையென்றால், 15 மாதங்களுக்கு முன்பு இருந்த நாட்டிற்கும் இன்று நாம் அனுபவிக்கும் நாட்டிற்கும் இடையிலான இடைவெளியைக் குறைத்திருக்க முடியாது.

எனவே, ஜனாதிபதி முதல் நிதியமைச்சு, இலங்கை மத்திய வங்கி, ஜனாதிபதி அலுவலகம், பல்வேறு முக்கிய அமைச்சுகள் மற்றும் இந்நாட்டு மக்களும் கைகோர்த்து பெற்றுக் கொண்ட பொருளாதார ஸ்திரத்தன்மையை இன்று அனுபவித்து வருகின்றனர். இந்தப் பயணம் எளிதாக இருக்கவில்லை. இன்று இருக்கும் நிலைக்கு வருவதற்கு மிகவும் வேதனையான காலகட்டத்தை நாம் கடந்தோம்.

இந்த வகையில் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த முதல் நாடு இலங்கை மட்டுமல்ல. ஆனால் குறுகிய காலத்தில் பொருளாதார நெருக்கடியில் இருந்து விடுபட சரியான பாதையில் பயணித்த நாடாக இலங்கை மாற்றமடைந்துள்ளது. இந்தப் பொருளாதாரத்தை மீண்டும் நல்ல நிலைக்கு கொண்டு வருவது என்பது அரசியல் கோணத்தில் பார்க்க வேண்டிய ஒரு விடயமல்ல. ஜனாதிபதி உள்ளிட்ட ஆட்சியாளர்கள் மக்கள் வரவேற்கும் தீர்மானங்களை எடுக்கவில்லை. அமக்கள் மத்தியில் பிரபல்யமடையக் கூடிய தீர்மானங்களை எமது ஆட்சி எடுத்திருந்தால், இந்த நாட்டின் நிலைமை 2022ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்ததைவிட இன்னும் மோசமாக இருந்திருக்கும்.

இந்த வகையில் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதில் இளைஞர்களின் பங்களிப்பு எமக்குத் தேவை. முதலில், பிரதேச அபிவிருத்திக்கு இளைஞர்களின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். இளைஞர்களான உங்கள் கருத்துகளையும் ஆலோசனைகளையும் எமக்கு வழங்குங்கள். ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலைபேறான முன்மொழிவை வழங்க முடிந்தால், திருத்தங்களைச் செய்ய நாங்கள் தயாராக இருக்கிறோம்.

வரவு, செலவுத்திட்டத்தில் உள்ள நல்ல விடயங்கள், மேலும் முன்னேற்றம் தேவைப்படும் விடயங்களை குறித்து கவனம் செலுத்துங்கள். ஒவ்வொருவரினதும் கருத்துகளுக்குஏற்பதீர்மானங்களை எடுப்பதற்குப் பதிலாக தரவு மற்றும் எண்களின் அடிப்படையில் உரிய பாராட்டுகளைப் பெறக்கூடிய முடிவுகளை எடுக்கும் கொள்கையை ஜனாதிபதியும் அரசாங்கமும் தற்போது நடைமுறைப்படுத்துகின்றனர். அதற்கிணங்க உலகின் சிறந்த நடைமுறைகளுடன் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்லும் வேலைத்திட்டத்திற்கு இளைஞர்களின் ஆதரவு தேவை என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

## காலைக்கதிரின் அக்னி வீச்சாய், உதயனின் உயிர் நாதமாய்

# தமிழ் மக்களின் குரலாக ஒலித்தவர்.. துணிச்சல் மிகுந்த பத்திரிகையாளர் கானமயில்நாதன்



**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

**(போர்க்கால நெருக்கடியிலும் தமிழ்ப் பத்திரிகை உலகை கம்பீர மாகத் துணிச்சலுடன் வழி நடத்தி யவர் ம.வ.கானமயில்நாதன். பேனாப் போராளியான மறைந்த கானமயில் நாதன், தமிழ் மக்களின் குரலாக என்றும் ஒலித்தவர். யாழ்ப்பாணத் தின் துணிச்சல் மிக்க பத்திரிகை யாளரான ம.வ.கானமயில்நாதன் 22/11/2023 ஈராண்டு நினைவாக இக்கட்டுரை பிரசுரமாகிறது.)**

ஈழத் தமிழினத்தின் ஏழு தசாப்தகால உரிமைப் போராட்டமும் அதற்காக அந்த இனம் செய்த புரிந்த - வேள்வித் தவமும் சொற்களால் அடக்கிவிட முடியாத உயரிய தியாகமும் அவமாகிப் போகாமல் அர்த்த முள்ளனவாக வேண்டும்' என 'காலைக் கதிர்' பத்திரிகையின் ஸ்தாபக பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன் தனது முதல் ஆசிரி யர் தலையங்கத்தில் குறிப்பிட்டார்.

### காலைக்கதிரின் அக்னி வீச்சாக

2016 கார்த்திகை 05 முதல் தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரலாக ஒலிக்கத் தொடங்கிய 'காலைக்கதிர்' பத்தி ரிகையின் ஸ்தாபக பிரதம ஆசிரியராக ம.வ.கானமயில்நாதன் பணியாற்றினார்.

பத்திரிகை காலத்தின் கண்ணாடி. ஒரு கருத்துருவாக்கி. அதற்கு அபாரமான சக்தி உண்டு. வாசகனின் ஆன்மாவைப் பற்றி, அவனை ஆகர்ஷித்து, நெறிப்படுத்தும் வழிகாட்டி அதுவே. வாசகனின் இருண்ட மனக் குகைக்குள் வெளிச்சத்தைப் பாய்ச்சி, மாயையைப்போக்கி, கனவுகளைக் கலைத்து, யதார்த்தத்தை விளக்கி, சிந்தனை விழிப்புணர்வைத் தூண்டி, நம்பிக்கையை வளர்த்து நெறிப்படுத்தும் நல்லாசானும் அதுவே என்றும் தன் ஆதர்சனமாக தன் முதல் தலையங்கத்தில் கூறியுள்ளார்.

கதிரவனின் கதிர்கள் போன்று, களனி-யிலே பூரித்து தலை சாய்க்கும் நெற்கதி ர்கள் போன்று 2016.11. 05 முதல் 'காலைக் கதிர்' தங்குதடையின்றி - காலகதி பிசகாமல் காலைக் கதிரவனின் கதிர்கள் பார்மீது பரவுவது போல, 'காலைக்கதிரு'ம் நாளாந்தம் தவறாமல் விடிகாலையில் மக்களை நாடிவர ஆசிரியர் கானமயில்நாதன ஆற்றிய பங்கு அளப்பரியதே.

உண்மை-நேர்மை- பக்கம் சாராமை என்ற தாரக மந்திரத்தை வரித்துக்கொண்டு, ஒரு புதிய - நீதிநாடி - நேரிய - சீரிய - ஊடக

தர்மத்தைத் தனது பாதையாக வகுத்துக் கொண்டு, நமது இனத்தின் விடிவுக்காகவும், உயர்ந்த சமூகமாற்றத்திற்காகவும் இன, மதநல்லிணக்கத்துக்காகவும் அர்ப்பணிக்கும் வகையிலும் 'காலைக்கதிர்' தளராது இந்த வாழ்வில் பணியாற்ற பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன் பிரதிக்ஞை செய்த மையை எளிதில் மறக்க முடியாது.

சமூகப் பிரக்ஞையுடனும், இனவுணர் வுடனும் தனது மக்களின் சமூக விடுத லைக்காகக் கிளர்ந்தெழும் பத்திரிகை, தனது மக்களின் தனது சமூகத்தின் -இருப்புக்கே கவசமாகவும் காவலனாகவும் உயர்கின்றது. அந்த அரும் பணியே ம.வ.கானமயில்நாத னின் இலக்காக என்றும் இருந்தது.

தனது வாழ்நாள் முழுவதையும் பத்திரிகைக்காக அர்பணித்தது மாத்திர மன்றி ஈழத்துப் பத்திரிகை ஜாம்பவான்கள் என்று குறிப்பிடத்தக்க தினகரன் பத்திரிகை ஆசிரியர் சிவகுருநாதன், தினபதி பத்தி ரிகை ஆசிரியர் சிவநாயகம், வீரகேசரியின் ஆசிரியர் எஸ்.கோபாலரட்ணம், ஆகியோ ரின் வரிசையில் வடக்கில் தடம் பதித்தவரே உதயன் கானமயில்நாதன்.

### துணிச்சலுடன் வழி நடத்திய பத்திரிகையாளர்

போர்க்கால நெருக்கடியிலும் தமிழ்ப் பத்தி ரிகை உலகை கம்பீரமாகத் துணிச்சலுடன் வழி நடத்தியவர் ம.வ.கானமயில்நாதன்.

ஊடகவியலாளர்கள் மக்களின் குரலாக இருக்க வேண்டும். செய்தியை உண்மைத் தன்மையுடன் சொல்லவேண்டும் என்று வலியுறுத்தி தமிழிற்கும், தமிழர்களுக்கும் பத்திரிகைத் துறையில் இவர் செய்த சேவை அளப்பரியது. ஈழத்துப் பத்திரிகை உலகைத் துணிச்சலுடன் தூக்கி நிறுத்தியவர் கானமயில்நாதன். ஈழ ஊடகத் துறையின் அடையாளமாகவும், மூத்த ஆளுமையாகவும் விளங்கிய மூத்த ஊடகவியலாள ரும், உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரு மான ம.வ.கானமயில்நாதன் 22.11.2021 அன்று நல்லூரில் தனது 79 ஆவது வயதில் காலமானார்.

எதையும் சாதிக்க முடியும் என்று ஊட கத்துறைக்கு வரும் இளையோர்களுக்கு வழிகாட்டியாக, தமிழ் ஊடக வரலாற்றின் ஒரு பெருவிருட்சமாக கானமயில்நாதன் விளங்கினார்.

### என்றும் ஊடக இளைஞனே

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த ம.வ.கானமயில்நாதன் 1942 ஆம் ஆண்டு ஜூலை பிறந்தார். ஊடகவியலாள



ருக்கு இருக்க வேண்டிய இள இரத்தம் அவ ரது உடலிலே என்றும் ஓடிக் கொண்டிருந்தது. அவர் ஓய்வுபெற்ற நிலையிலும் ஊடகப் பணியைத் தொடர்ந்த இளைஞன் என்றால் மிகையல்ல.

1962ஆம் ஆண்டு ஊடகத்துறையில் காலடி எடுத்து வைத்தது முதல் 56 ஆண்டுகளுக்கும் மேலாக ஊடகத்துறை யில் தடம்பதித்தார். 1962ஆம் ஆண்டு ஈழுநாடு பத்திரிகையில் உதவி ஆசிரியராகத் தொடங்கியது இவரது ஊடகத் துறை வாழ்வு. அதன் பின்னர் 1965ஆம் ஆண்டு தினபதி பத்திரிகையில் உதவி ஆசிரியராக இணைந்து பின்னர் பிரதம உதவி ஆசிரியராக உயர்ந் தார். 1983ஆம் ஆண்டு இனக்கலவரம் நடக்கும் வரை கொழும்பில் தினபதியிலேயே பணியாற்றினார்.

1983ஆம் ஆண்டு இனக்கலவரத்தைத் தொடர்ந்து, யாழ்ப்பாணம் திரும்பிய இவர், பின்னர் வீரகேசரியில் பணியாற்றினார். அதன்பின், நவம்பர் 1985ஆம் ஆண்டு உதயன் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டபோது. பிரதம ஆசிரியராகப் பெறுபேற்று நீண்டகால மாகப் பிரதம ஆசிரியராகப் பணியாற்றினார்.

### உதயனின் உயிர் நாதமாய்

தனது ஊடகப் பயணத்தினை வீரகேசரி ஆசிரியர் பீடத்தில் ஆரம்பித்து, தினபதி பத்திரிகையின் செய்தி ஆசிரியராகியவர் கானமயில்நாதன். தினபதி பத்திரிகை இடை நிறுத்தப்பட்ட பின்னர் யாழ்ப்பாணத்தில் பத்தி ரிகை ஒன்றை நடத்த வேண்டிய தேவை எழுந்தபோது 1985ஆம் ஆண்டு உதயன் பத்திரிகை உருவாக்கப்பட்டு அன்றிலிருந்து தொடர்ச்சியாகப் பத்திரிகைத் துறையில் பிரதம ஆசிரியராகத் தனது ஊடகப் பணியில் அசைக்க முடியாத முத்திரையைப் பதித்தார்.

உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரி யராக அவர் பணியாற்றிய போது எதிர்கொண்ட ஆபத்துக்கள்சவால்கள்எண்ணிலடங்காதவை. ஆனால் அவற்றுக்கு எல்லாம் அஞ்சாது, தொடர்ந்தும்ஊடகப்பணியைமுன்னெடுத்தார்.

### 36 வருடங்கள் பிரதம ஆசிரியராக

பலதரப்பட்ட அரசியல் அனுபவ அறிவு டைய அவர், தமிழ் மக்களின் குரலாக மக்களுக்காகப் பேசுகின்ற நல்ல மனம் படைத்தவர். ஆகவே அவர் யாழ். குடாநாட் டின் மிக மூத்த யாவரும் பெருமைப்படக்கூடிய ஒரு ஊடகவியலாளராக மிளிர்ந்தார்.

உதயன் பத்திரிகை 1985ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ஆம் தேதி ஆரம்பிக்கப்பட் டது முதல் தனது வாழ்வின் இறுதிக்காலம் வரையிலான 36 வருடங்கள் பிரதம ஆசிரியராகக் கடமையாற்றியுள்ளமை ஒரு வரலாற்றுப் பதிவே. இறுதியாக காலைக் கதிர் பத்திரிகையின் ஆசிரியர் பீடத்திலும் பங்களித்தார். சிறந்த வழிகாட்டியாகவும் பண்பாளனாகவும் தன்னை நிலைநிறுத் திய பத்திரிகை ஆசான் அவர்.

### சத்தமற்ற ஊடகவியலாளராக

ஈழ விடுதலைப் போராட்டத்தின் சத்த மற்ற ஊடகவியலாளராக இருந்து, மறைந்த மூத்த ஊடகவியலாளர் ம.வ.கானமயில் நாதன் தமிழ் மக்கள் மீதான அரச அடக்குமு-றையை வெளியுலகத்துக்கு உரத்து வெளிப் படுத்தியவர்.

உதயன் பத்திரிகை மீது, பேரினவாத ஆட்சிகள் கொடுஞ்சினம் கொண்டிருந்ன, உதயனின் குரலை நசுக்கி விடவேண்டும் என்று அவை கங்கணம் கட்டிச் செயற்பட்ட காலம் அது. உதயன் பத்திரிகை மீது எண் ணிலடங்காத தாக்குதல்கள், உயிர் பறிப்புக் கள் நிகழ்த்தப்பட்டன.

ம.வ.கானமயில்நாதன் மீது யாழ்ப்பாணம் இலுப்பையடிச் சந்தியில் வைத்து, இராணுவ துணைப் படையினஜைன' வாகனத்தால் திட்டமிட்டு விபத்து ஏற்படுத்தப்பட்டது. அதில் அவர் காயங்களுடன் தப்பியபோதும், அன்று முதல் கோல் ஊன்றி நடக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்.

ஆயினும் வடக்கில் இருந்து வெளியான தமிழ் மக்களின் குரலை கொடுங்கோலர்க ளால் நசுக்க முடியவில்லை. ஊடகப் பரப்பில் உரிமை கோரப்படாத இறப்புக்களும் காணா மல் ஆக்கப்படுதல்களும் அச்சுறுத்தல்களும் நிரம்பி வழிந்த மண்ணில் சோரம் போகாது தனது ஊடகப் பணியை உதயன் நாளிதழில் அதன் பிரதம ஆசிரியராக இருந்து ஆற்றியவர் ம.வ.கானமயில்நாதன்.

### கொலைவாளின் கீழாக ஊடகப் பணி

2005இன் பிற்பகுதியில் துப்பாக்கிதாரர் களது கொலைக் கரங்களில் இருந்து தப்பிக்க அவர் வருடக்கணக்கில் தனது அலுவலகத் தில் முடங்கிக் கிடந்தே, நாள்தோறும் உதயன் நாளிதழை வெளிக்கொணர்ந்தார்.

ம.வ.கானமயில்நாதனை அச்சுறுத் தல்களால் அடிபணிய வைக்கலாமெ ன்று பலரும் எதிர் பார்த்தபோதும் தனது ஒற்றைப் பேனா வின் முனையை நம்பி கொலை வாளின் கீழாக ஊடகப் பணியாற்றி யவர்.

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டப் பரப்பில் ஊடகப் பங்களிப்பு பற்றிய வரலாற் றுப் பதிவுகளில் என்றுமே விலக்கப்பட முடியாத சக்திகளில் ஒருவராக அவர் இருந்து வந்திருந்தார்.

### தமிழ் மக்களின் குரலாக

மறைந்த கானமயில்நாதன் நெருக்கடி யான கால கட்டத்தில் தாயகத்தில் இருந்து ஊடகப்பணியாற்றிய மிக சொற்ப அளவிலான மூத்த ஊடகவியலாளர்களில் ஒருவர்.

ஊடகவியலாளர்கள் மக்களின் குரலாக இருக்கவேண்டும். செய்தியை உண்மைத் தன்மையுடன் சொல்லவேண்டும். எதி லும் கேள்வி கேளுங்கள். எதற்காகவும் விட்டுக்கொடுப்புகளைச் செய்யாதீர்கள். இவையே ஊடகத்துறைக்கு வரும் இளை யோருக்கு கானமயில்நாதன் என்றும் ஊட்டி வளர்த்தவை. அவர்களாலும்

சாதிக்கமுடியும். என்று வழிகாட்டிய வரலாற்றின் பெரும் ஆலமரம் சரிந்து இரண்டாண்டுகள் உருண்டோடிவிட்டன.

ம.வ.கானமயில்நாதனின் பாசறையில் வளர்ந்த பல ஊடகவியலாளர்கள் இன்றும் உலகின் பல திசைகளிலும் தேமதுரத் தமிழைக்காத்து வருகிறார்கள்.

தமிழ் மக்களின் குரலாக, சத்திய நேர்மையுடன் கானமயில்நாதனின் பேனா உண்மைகளை வரிகளாக்கி வரலாற்றில் ஆவணமாக்கி உள்ளது.

### பிரான்ஸின் தலைநகரில் விருது

பிரான்ஸின் தலைநகரான பாரிஸில் 2013ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ஆம் தேதி எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் தன்னார்வ அமைப்பின் துணிச்சலான பத்தி ரிகைக்கான விருது அவரது கைகளிலேயே வழங்கப்பட்டது.

அத்துடன் தமிழ் மக்களின் குரலாக, சத்திய நேர்மையுடன் கானமயில்நாதனின் ஊடகத்துறையில் தேசியம் சார்ந்த நெருக்க டியான சூழலில் அர்ப்பணிப்புடன் கடமை யாற்றியமைக்காக 2018ஆம் ஆண்டு நவ-ம்பர் மாதம் 16ஆம் தேதி யாழ்.ஊடக அமை யத்தால் வாழும்போதே கௌரவிக்கப்பட்டார்.

ஈழத்துப் பத்திரிகை வரலாற்றிலேயே தொடர்ச்சியாகப் பத்திரிகை ஆசிரியராக இருந்து நெருக்கடியான போர்ச் சூழலிலும், ஊடக அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் தனது இலக்கில் சிறிதும் தடம் மாறாது பயணித்துக்கொண்டிருந்த மூத்த ஊடகவி-யலாளர் ம.வ.கானமயில்நாதன் ஊடகப் பரப்பிலுள்ள இளையோருக்கு ஓர் எடுத்துக் காட்டு எனலாம்.

தனது வாழ்நாள் முழுவதையும் பத்திரிகைக்காக அர்பணித்தது மாத்திர மன்றி ஈழத்துப் பத்திரிகை ஜாம்பவான்கள் என்று குறிப் பிடத்தக்க தினகரன் பத்திரிகை ஆசிரியர் சிவகுருநாதன், தினபதி பத்தி ரிகை ஆசிரியர் சிவநாயகம், வீரகேசரியின் ஆசிரியர் எஸ்.கோபாலரட்ணம், ஆகியோ ரின் வரிசையில் வடக்கில் தடம் பதித்தவரே உதயன் கானமயில்நாதன்.


JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN
EASILY
BOOK
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

காலைக்கதிர் Kalaikkathir

## உரும்பிராயில் முதியவர் அடித்துகொலை பேச்சுத் திறனற்றவர் சந்தேகத்தில் கைது

யாழ்ப்பாணம் - உரும்பிராய் தெற்கு பகுதியில் முதியவர் ஒருவர் அடித்து கொலை செய்யப்பட்டுள்ளார். குறித்த சம்பவம் சனிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

அத்தோடு, இந்தக் கொலையுடன் தொடர்புடையவரென சந்தேகிக்கப்படும் பேச்சுத் திறனற்ற ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தாக்குதலுக்கு இலக்கான முதியவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

உணவகம் ஒன்றில் பணியாற்றும் உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் பிறேமராசன் என்ற 66 வயதானவரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

உணவகம் ஒன்றில் ஏற்பட்ட முரண்பாடே கொலைக்கான காரணம் என தெரியவந்துள்ளதன் பின்னர், அதே பகுதியை சேர்ந்த பேச்சுத் திறனற்ற 44 வயதுடைய சந்தேக நபர் ஒருவர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொலை நடந்த இடத்தை யாழ்ப்பாணம் நீதிவான் ஏ.ஆனந்தராஜா ஞாயிற்றுக்கிழமை பார்வையிட்டதுடன், இச்சம்பவம் தொடர்பாக தடயவியல் பொலிஸார் மற்றும் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# திருமலையில் கான்ஸ்டபிளுக்கு போதைப்பொருள் விநியோகித்தவர் கட்டுநாயக்கவில் வைத்து கைது

திருகோணமலை பிரதேசத்தில் ஐஸ் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டார் எனக் கூறப்படும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவருக்கு போதைப்பொருள் விநியோகித்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் தனது குடும்பத்துடன் தாய்லாந்துக்கு சுற்றுலா சென்று, இலங்கை திரும்பியபோது பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகள் குழுவால் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் கொழும்பு-8, பொரளை பிரதேசத்தில் வசிக்கும் 44 வயதுடையவர்.

சந்தேக நபர் தனது குடும்ப உறுப்பினர்களுடன் தாய்லாந்து பயணத்தை முடித்துக் கொண்டு பாங்கொக்கில் இருந்து ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானமானத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தபோதே கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட நபர் மேலதிக விசாரணைகளுக்காக கொழும்பு பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவின் தலைமையகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (05)

# சகோதரியுடன் காதல் தொடர்பு; பிக்கு தாக்கி ஒருவர் உயிரிழப்பு

தேரர் ஒருவரால் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டதில் பலத்த காயமடைந்து காலி கராப்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஞாயிற்றுக்கிழமை காலை உயிரிழந்துள்ளார் எனக் கராப்பிட்டிய வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பல்லேகமவில் உள்ள விஹாரை ஒன்றில் பணிபுரியும் தேரர் ஒருவர் கடந்த 16ஆம் திகதி தனிப்பட்ட தகராறு காரணமாக தெனியாய பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை ஆயுதத்தால் தாக்கியுள்ளார்.

இதனால் பலத்த காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே உயிரிழந்துள்ளார். இந்த பொலிஸ் உத்தியோகத்தர் சந்தேக நபரான தேரரின் சகோதரியுடன் காதல் தொடர்பில் இருந்தமை ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

தாக்குதலை மேற்கொண்ட சந்தேக நபரான தேரர் தெனியாய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (05)

# இரண்டு லட்சம் பேர் சிறுவயது கர்ப்பம்

## கீதா குமாரசிங்க வேதனை

2 லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் சிறுவயதிலேயே கர்பமாகின்றனர் எனவும் அவர்களுக்கு இலவசமாக சட்ட ஆலோசனை வழங்க, அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருவதாகவும் மகளீர், மற்றும் சிறுவர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஒரு கோடியே 13 லட்சத்து 67 ஆயிரம் பெண்கள் நாட்டில் உள்ளனர். இவர்களில் 27 லட்சத்து 13 ஆயிரம் பெண்கள் பாடசாலைக்கு செல்கின்றனர். 2 லட்சத்து 2 ஆயிரத்து 287 சிறுவயது தாய்மார்கள் நாட்டில் உள்ளனர்.

சிறுமிகளின் தாய் வெளிநாடுகளில் வேலை சென்றுள்ளபோது, அவர்களுக்கு வீட்டிலேயே பாதுகாப்பு இல்லாத நிலைமை ஏற்படுகிறது. அத்தோடு, தாய்- தந்தை பிரிந்து வாழ்வதாலும் சிறுமிகளின் வாழ்க்கை பாதிக்கப்படுகிறது.

பாலியல் கல்வி தொடர்பாக இவர்களிடம் போதிய அறிவு இல்லாமல் உள்ளது. பொருளாதாரப் பிரச்சினை காரணமாக தாய் - தந்தை இருவரும் தொழிலுக்கு செல்லும் வீடுகள் அல்லது தாய்- தந்தை இருவரும் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள வீடுகளிலும் சிறுமிகள் பாதிக்கப்படுகிறார்கள்.

விசேடமாக பெற்றோர் மதுவுக்கு அடிமையான குடும்பங்களிலும் சிறார்கள் அதிகமாகப் பாதிக்கப்படும் அதேசமயம் தொலைபேசி பாவனையும் சிறார்களை அதிகம் பாதித்துள்ளது.

2022 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட குடும்ப நலக் கணக்கெடுப்பால் இந்தத் தகவல்கள் பெறப்பட்டிருந்தன. 18 வயதுக்கு உட்பட்ட சிறார்களுடன், அவர்களின் அனுமதியுடன்கூட பாலியல் உறவில் இருப்பது எமது நாட்டைப் பொறுத்தவரை சட்டவிரோதமாகும்.

நாம் தற்போது இவ்வாறான சம்பவங்களல் பாதிக்கப்படும் சிறார்களுக்கு, இலவச சட்ட ஆலோசனை வழங்க கிராமிய மட்டத்திலிருந்து நடவடிக்கை எடுத்து வருகிறோம். - எனக் கூறியுள்ளார். (05)

# கட்டையால் அடித்து கணவன் படுகொலை

## மனைவி கைது

இப்பலோகம, விஜிதபுர பிரதேசத்தில் மனைவி தனது கணவரைக் கட்டையால் அடித்துக் கொலை செய்துள்ளதாக இப்பலோகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் கிடைத்த முறைப்பாட்டின் பிரகாரம், இப்பலோகம பொலிஸார் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதுடன், கொலையை செய்ததாகக் கூறப்படும் பெண்ணும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இருவருக்கும் இடையில் ஏற்பட்ட குடும்பத்தகராறு முற்றியதையடுத்து மனைவி, கணவனை கட்டையால் அடித்துக் கொலை செய்துள்ளதாக முதற்கட்ட விசாரணைகளின்போது தெரிய வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இப்பலோகம விஜிதபுர, பலுகஸ்வெள பண்ணை பகுதியை சேர்ந்த 52 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (05)

# வெள்ளம் அடித்துச்சென்ற பஸ் சாரதி உயிரிழப்பு

பலத்த மழை காரணமாக ரங்கல பிரதேசத்தில் வெள்ளம் சூழ்ந்த பாலத்தில் மோட்டார் சைக்கிளில் பயணிக்க முற்பட்ட 50 வயதுடைய நபரொருவர் நீரில் சிக்கி அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

தெல்தெனிய டிப்போவில் சாரதியாக கடமையாற்றிய 50 வயதான ரங்கல பிரதேசத்தை சேர்ந்தவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பணி முடிந்து வீட்டுக்குச் செல்வதற்காக ரங்கல போகஹகும்புர ஓயாவுக்கு வந்த போது பாலம் வெள்ளத்தில் மூழ்கிய நிலையில் மோட்டார் சைக்கிளில் பாலத்தை கடக்க முற்பட்டபோதே அவர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளார். (05)

# எம்.பிக்கள் மீதும் பாயும் புதிய சட்டம்

'நாடாளுமன்ற உறுப்பினர்களின் அநாகரிகமான செயல்கள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கான புதிய சட்டமூலமொன்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாக' நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாடாளுமன்ற உறுப்பினர்களின் செயற்பாடுகள் தொடர்பாக நாட்டு மக்களிடம் பல விமர்சனங்கள் உள்ளன. நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தனது பதவியின் கௌரவத்தைப் பாதுகாக்காவிடின், அந்த உறுப்பினரின் உறுப்புரிமையை இரத்துச் செய்வதற்கு புதிய சட்ட மூலத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. - இவ்வாறு விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார். (05)

# மாற்று பாலினத்தவர்களின் விழிப்புணர்வு நடைபவணி

## யாழில் நடந்தது

மாற்றுப் பாலினத்தவரின் விழிப்புணர்வு வாரத்தை முன்னிட்டு யாழ்.நகரில் விழிப்புணர்வு நடைபவனியொன்று முன்னெடுக்கப்பட்டது.

மாற்றுப் பாலினத்தவர்களின் வலையமைப்பின் ஏற்பாட்டிலேயே குறித்த பேரணி முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது மாற்றுப் பாலினத்தவர்களாக வாழ்கின்ற அனைவரும் சமூகப் பொறுப்புடையவர்கள் எனவும், அவர்கள் மீதான ஒடுக்குமுறைக்கு எதிராகக் குரல் கொடுப்போம் எனவும் பேரணியில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர். (05)

# புதிய மதுபானசாலை திறப்பதற்கு எதிர்ப்பு

இதுவரை மதுபானசாலை இல்லாத பண்டாரகம பிரதேசத்தில் புதிய மதுபானசாலையை திறப்பதற்கு மகா சங்கரத்தின மற்றும் ஏனைய மத தலைவர்கள் மற்றும் பிரதேசவாசிகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

கலால் திணைக்களத்தின் அனுமதியுடன் இந்தப் பிரதேசத்தில் மதுபானசாலையொன்று ஸ்தாபிக்கப்படவுள்ளதாகவும் அதற்கான பணிகள் துரித கதியில் இந்த நாள்களில் இடம்பெற்று வருவதாகவும் பண்டாரகம விஹாராதி மற்றும் விஹாராதிகர் சங்கத்தின் செயலாளர் கலாநிதி தல்கம்பல பதும தேரர் தெரிவித்தார்.

பண்டாரகம ஸ்ரீ தர்மலோக விகாரையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அந்த விவாதத்தில், இந்த முயற்சியை நிறுத்தக் கோரி போராட்டம் நடத்துவது என ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது.

கட்சி பேதங்களைப் புறக்கணித்து இப்பகுதியில் மதுபானக் கடைகளைத் திறக்கும் முயற்சியைத் தடுக்க பாமர பௌத்தர்கள் மற்றும் பௌத்தர்கள் அல்லாத அரசியல்வாதிகள் ஒன்று திரண்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

களுத்துறை மாவட்டம் பண்டாரகம அருகே மதுக்கடைகள் இல்லாததற்குக் காரணம் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இந்தப் பகுதியில் மதுக்கடை அமைக்கும் முயற்சியை முறியடித்த கருத்துக்கணிப்பும், 1944 இல் மதுவால் 20 பேர் கொல்லப்பட்டமை தொடர்பாக உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பும்தான் எனவும் குறிப்பிட்டுள்ளனர். (05)

# பிரிவினையைத் தூண்டுபவர்களைக் கண்டிக்க முஸ்லிம் சமூக தலைவர்கள் முன்வரவேண்டும்

## ஐ.ஏ. கலிலூர் ரஹ்மான் தெரிவிப்பு

சமூகங்களுக்கு இடையில் பிரிவை உண்டாக்குவோர்களை கண்டிக்க முஸ்லிம் சமூகத் தலைவர்கள் முன்வரவேண்டும்' என கொழும்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் ஐ.ஏ. கலிலூர் ரஹ்மான் தெரிவித்துள்ளார். பரதக்கலை தொடர்பாக மௌலவி ஒருவர் தெரிவித்த கருத்தானது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலையில் இது குறித்த ஐ.ஏ. கலிலூர் ரஹ்மான் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு -

தமிழ் மக்களின் பாரம்பரியமும், கலைநயமும் மிக்க பரதக் கலை ஆண்களை மகிழ்விப்பதற்காக ஆடப்படுவதாகவும், விலைமாதர்கள் ஆடும் நடனமாக இது பார்க்கப்படுவதாகவும் அண்மையில் அப்துல் ஹமீட் ஸராயி என்ற மௌலவி தெரிவித்திருந்தார். இதனை நான் மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறேன். அவரது கருத்து இந்துக்களின் மனதை புண்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. இவ்விடயம் குறித்து இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இது விடயமாக பொலிஸார் சுயாதீன விசாரணை செய்து குறித்த உலமாவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்ற இனங்களின் மதகுருக்கள் எமது மார்க்கம் தொடர்பில் ஏதாவது பிழையான கருத்துக்களை முன்வைத்தால் கொதித்தெழும் இலங்கையின் உலமாக்கள், அரசியல் தலைவர்கள், சிவில் அமைப்புகளின் தலைவர்கள், மத தலைவர்கள் இந்த விடயத்தில் மௌனம் காத்திருப்பது கவலையளிக்கிறது. பிற சமூகங்களுடன் நல்லிணக்கமாக வாழ கற்றுத்தந்த மார்க்கத்தை பின்பன்றும் நாம் எமது சமூக உலமாக்கள் பிழை விட்டாலும் அதை சுட்டிக்காட்ட வேண்டியது எமது கடமையாக உள்ளது. இதை செய்யாது மௌனம் காப்பது ஏனைய சமூகங்கள் மத்தியில் முஸ்லிம்கள் தொடர்பில் பிழையான விம்பத்தை உருவாக்கும். இப்படியான மௌனமான போக்குகள் எதிர்காலத்தில் எமக்கு பாதகமான சூழ்நிலையை உருவாக்கும். இதனைத் தவிர்க்கும் வகையில் உலமாக்கள், அரசியல் தலைவர்கள், சிவில் அமைப்புக்களின் தலைவர்கள், மத தலைவர்கள் இந்த விடயத்தில் குரலெழுப்ப வேண்டும். - இவ்வாறு தெரிவித்துள்ளார். (05)

# பொது மக்களின் வரிச்சுமை குறைக்கப்படுதல் வேண்டும்

## முன்னாள் நிதி அமைச்சர் வலியுறுத்தல்



பொது மக்களின் வரிச்சுமை குறைக்கப்பட வேண்டும் என முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

திவால்நிலையிலிருந்து வெளியே வர வேண்டும் என்றாலும் சர்வதேச நாணய நிதியத்தின் தாளத்திற்கு ஏற்ப ஆட முடியாது என்றும் தெரிவித்துள்ளார்.

ஆகவே வரிகளைக் குறைப்பதற்கான வேலைத்திட்டத்தை அரசாங்கம் முன்வைக்க வேண்டும் என முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க வலியுறுத்தியுள்ளார்.

ஏற்கனவே வரி செலுத்தி வருபவர்களுக்கு சுமையை ஏற்படுத்தாமல் வரி வலையை விரிவுபடுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கையுடனான பங்காளிப்பை அமெரிக்கா தொடர்ந்தும் மதிக்கும்

## சமந்தா பவர் தெரிவிப்பு

இலங்கையுடனான பங்காளிப்பை அமெரிக்கா தொடர்ந்தும் மதிப்பதாக சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவரகத்தின் நிர்வாகி சமந்தா பவர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் தெரிவித்துள்ளார்.

மாலைதீவின் புதிய ஜனாதிபதி மொஹமட் முய்ஸு பதவியேற்பு நிகழ்விற்காக மாலைதீவிற்கு விஜயம் மேற்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் பொருளாதார மீட்சி மற்றும் அரசியல் சீர்திருத்தங்களின் முக்கியத்துவத்தை இதன்போது வலியுறுத்தியதாக சமந்தா பவர் தெரிவித்துள்ளார்.



அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் இலங்கையின் துறைமுக உள்கட்டமைப்பில் அண்மையில் 550 மில்லியன் முதலீடு செய்தது.

இந்தவிடயத்தைசுட்டிக்காட்டிய சமந்தா பவர், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அரசாங்கத்தின் நிலைப்பாடு இதில் வெளிக்காட்டப்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளார். (05)

# யாழ். மாவட்டத்தில் புலமைப் பரிசிலில் சாதனை படைத்த மாணவி கௌரவிப்பு



தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை மாணவி ஜெரால்ட் அமல்ராஜ் வனிஷ்கா 196 புள்ளிகளைப் பெற்று யாழ். மாவட்டத்தில் முதலிடம் பெற்றார்.

குறித்த மாணவியை கௌரவிக்கும் நிகழ்வானது மக்கள் வங்கி யாழ். பல்கலைக்கழக கிளையினரால் முன்னெடுக்கப்பட்டது. இந் நிகழ்வில் பாடசாலை அதிபர் மற்றும் யாழ் கல்வி வலய திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.(05)

# 76 வருடங்களின் பின்னர் இலங்கையில் புதிய வகை பாம்பு இனம் கண்டுபிடிப்பு

இலங்கையில் 76 வருடங்களின் பின் புதிய வகை பாம்பு இனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

உலர் வலயத்துக்குட்பட்ட கிரித்தல பிரதேசத்தில் இந்த புதிய வகை பாம்பு இனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஊர்வன தொடர்பான ஆராய்ச்சியில் ஈடுபட்ட நிரத்த நெத்து விக்கிரமசிங்க, துலா ன் ஆர். விதானபத்திரன, மகேஷ் சி. டி சில்வா, கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியர் கமானி எச். தென்னகோன், பேராசிரியர் சமீர ஆர். சமரகோன் மற்றும் ஊர்வன நிபுணர் மெண்டிஸ் விக்கிரமசிங்க ஆகியோர் நீண்டகால ஆராய்ச்சியின் பின்னர் இந்த இனத்தைக் கண்டுபிடித்துள்ளனர்.

கடந்த 76 வருடங்களுக்கு முன்னாள் எட்வர்ட் டேலர் என்பவரால் இலங்கையில் புதிய இனப் பாம்பு கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

# கிரிக்கெட் இடைக்கால நிர்வாகக் குழு; வழக்கு விசாரணை நவம்பர் மாதம் 22

கிரிக்கெட் இடைக்கால நிர்வாகக் குழுவுக்கு எதிரான மனு மீதான விசாரணையை எதிர்வரும் 22 ஆம் திகதி வரை ஒத்தி வைக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று (20 திங்கட்கிழமை) உத்தரவிட்டுள்ளது.

விளையாட்டுத்துறை அமைச்சரால் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் அன்றைய தினம் வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட மாட்டாது என அமைச்சர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி நீதிமன்றத்துக்கு அறிவித்தார். (05)

# யாழ். நவாலியில் ஓட்டோவில் சென்ற முதியவர் மயங்கி விழுந்து உயிரிழப்பு

*யாழ்ப்பாணம் -நவாலி பகுதியில் நேற்று (திங்கட்கிழமை) சைக்கிளில் சென்ற முதியவர் ஒருவர் மயங்கி விழுந்து உயிரிழந்தார்.*

*மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த 70 வயதான அருளப்பு விமலதாஸ் என்ற முதியவரே உயிரிழந்துள்ளார்.*

*நவாலி சென்பீற்றர்ஸ் தேவாலயம் அருகில் உள்ள வீதியில் நேற்று (திங்கட்கிழமை) காலை முதியவர் மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.*

*சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.*

*(05)*

# 4 மாதங்களில் வைத்தியசாலையை கட்டிமுடித்த செந்தில் தொண்டமான்

அம்பாறை மாவட்ட கோனோ கொல்ல பொதுமக்கள், உறுப்பினர்களான விமலவீர திஸாநாயக்க மற்றும் வீரசிங்கம் ஆகியோரால் வைத்தியசாலை நிர்மாணித்து தருமாறு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அந்தவேண்டுகோளுக்கு இணங்க 34 மில்லியன் ரூபா பெறுமதியில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள கோனோகொல்ல கிராமத்தில் வைத்தியசாலை நிர்மாணிப்பதற்காக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் அடிக்கல் நாட்டப்பட்டது.

அடிக்கல் நாட்டப்பட்டு நான்கு மாத காலத்திற்குள் வைத்தியசாலை நிர்மாணிக்கப்பட்டு மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டுள்ளது.

ஆளுநரின் இந்த துரித நடவடிக்கைக்கு அம்பாறை மாவட்ட மக்கள் நன்றி தெரிவித்துள்ளனர். (05)

# சிவனொளி பாதமலை கழிவுகளை அகற்ற வருடாந்தம் இரு மில்லியன் ரூபா செலவு

சிவனொளிபாதமலையை வழிபட வரும் பக்தர்களால் எறியப்படும் பொலித்தீன், பிளாஸ்ரிக் மற்றும் ஏனைய திண்மக் கழிவுகளை அகற்றுவதற்கு அரசாங்கம் வருடாந்தம் பெருமளவு பணம் செலவழிப்பதாகவும், நுவரெலியா மாவட்ட செயலகத்தால் மட்டும் 2 மில்லியன் ரூபாவிற்கும் அதிகமான பணம் செலவிடப்படுவதாகவும் நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபொட தெரிவித்துள்ளார்.

2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுக்கான சிவனொளி பாதமலை யாத்திரை காலம் டிசெம்பர் 26 ஆம் திகதி போயா அன்று ஆரம்பிக்கப்படவுள்ளதுடன், பக்தர்கள் அனைவரும் பொலித்தீன், பிளாஸ்டிக் போன்ற கழிவுகளை எடுத்துச் செல்லாமல் சிவனொளி பாதமலையைத் தரிசிக்குமாறு பொது மக்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா, இரத்தினபுரி மாவட்ட செயலகம் மற்றும் அனைத்து அரச நிறுவனங்களின் ஒருங்கிணைப்புடன் பக்தர்களுக்குத் தேவையான வீதிகள், நீர், மின்சாரம் மற்றும் ஏனைய பொது வசதிகள் எதிர்வரும் நாள்களில் அபிவிருத்தி செய்யப்படும் என நுவரெலியா மாவட்ட செயலாளர் குறிப்பிட்டுள்ளார். (05)

# சுமார் 3 கோடி ரூபா பெறுமதியான கேரளா கஞ்சா யாழில் சிக்கியது

யாழ்ப்பாணம், காரைநகரிலுள்ள பற்றைக் காடொன்றில் இருந்து, நேற்று (திங்கட்கிழமை) அதிகாலை 101 கிலோ 750 கிராம் நிறைகொண்ட சுமார் 3 கோடி ரூபா பெறுமதியான கஞ்சாப் பொதிகள் கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளன.

கடற்படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்தே குறித்த கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டுள்ளன. இந்நிலையில் இது குறித்த மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

# புத்தக விற்பனை நிலையத்தில் தாக்குதல் உரிமையாளர் உட்பட இருவர் படு காயம்

பன்னிப்பிட்டிய மாம்புல்கொட பிரதேசத்திலுள்ள புத்தக விற்பனை நிலையம் ஒன்றுக்குச் சென்ற இனந்தெரியாத ஒருவர், கூரிய ஆயுதத்தால் தாக்கியதில் கடையின் உரிமையாளர் உட்பட இருவர் காயமடைந்து ஹோமாகம ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என ஹோமாகம தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தகக் கடையின் உரிமையாளர் இடத்தை நோக்கிச் சென்ற இனந்தெரியாத நபர், தான் மறைத்து வைத்திருந்த கூரிய ஆயுதத்தை எடுத்து கடையின் உரிமையாளரைத் தாக்கினார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தைக் கண்ணுற்ற ஒருவர் தாக்குதலைத் தடுக்க முயற்சித்தபோது அவர் மீதும் குறித்த நபர் தாக்குதல் நடத்தியுள்ளார்.

இந்நிலையில், கடையின் உரிமையாளர் வெட்டுக்காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

(05)

# தங்க நகை அணியாதமையால் பெண்ணை தாக்கிவிட்டு தப்பிச்சென்ற கொள்ளை கும்பல்

வீதியில் நடந்து சென்ற பெண் சங்கிலி அணியாததால் அவரை தாக்கி விட்டு , வீதியில் தள்ளி விட்டு முகமூடி கொள்ளை கும்பல் ஒன்று தப்பி சென்றுள்ளது.

யாழ்ப்பாணம் - சுழிபுரம் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற குறித்த இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது -

வீட்டிற்கு அருகில் உள்ள ஆலயம் ஒன்றில் வழிபாட்டை முடித்துக் கொண்டு தனது வீடு நோக்கி குறித்த பெண் நடந்து செல்கையில் , அவரை மோட்டார் சைக்கிள் ஒன்றில் தங்கள் முகங்களை மறைத்து துணியால் கட்டியவாறு பின் தொடர்ந்த இருவர் அந்தப் பெண்ணின் கழுத்தில் கை வைத்துள்ளனர்.

அதன்போதே அப்பெண் கழுத்தில் தங்க நகைகள் எதுவும் அணிந்திருக்கவில்லை எனத் தெரிந்து கொண்டதும் அந்தப் பெண்ணை தாக்கி விட்டு, வீதியில் தள்ளி விழுத்தி விட்டு முகமூடி கொள்ளையர்கள் தமது மோட்டார் சைக்கிளில் தப்பி சென்றுள்ளனர். (05)

# தொம்பேயில் ஓட்டோ மோதி ஒருவர் சாவு

தொம்பே பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தெமாலகம கட்டுலந்த வீதியில் தெமாலகம பிரதேசத்தில் இருந்து கட்டுலந்த பிரதேசத்தை நோக்கி பயணித்த ஓட்டோ ஒன்று பாதசாரி ஒருவர் மீது மோதியதில் குறித்த நபர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் தெமாலகம பிரதேசத்தை சேர்ந்த 62 வயதுடைய நபராவார்.

காயமடைந்தவர் தொம்பே வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என தொம்பே பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஓட்டோ சாரதி காயமடைந்த நபரை வைத்தியசாலையில் சேர்த்த பின்னர் தலைமறைவாகியுள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தொம்பே பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.11.2023இல் வெளியிடப்பெற்றது.